உ

சிவமயம்

அகத்தியமுனிவர் அருளிச்செய்த

பெருநூல்

வயித்தியகாவியம்

சூ[illegible]

இஃது [illegible]

திருவெண்காடு

ஆறுமுகசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு,

திருவொற்றியூர்

இருசப்பமுதலியார்குமாரர்

பரசுராமமுதலியாரது

பரப்பிரமமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

௧௮௮௰ ௵ ஜூன்ˢ.

THE TANJAVUR MAHARAJA SERFOJI'S SARASVATI MAHAL LIBRARY * THANJAVUR

THE TANJAVUR MAHARAJA SERFOJI'S SARASVATI MAHAL LIBRARY * THANJAVUR 29 FEB 1988

உ

சிவமயம்.

அகத்தியமகாமுநிவர்

திருவாய்மலர்ந்தருளிய

வயித்தியகாவியம்-௲௫௱.

காப்பு

பாருடன்கணேசன்பாதம் பணிந்துமுக்குணங்களாகி
வாகுடத்தொகுதியெல்லாம் வகுத்தருத்திரமதாகி
ஆகமவிதியினாலா யாய்ந்திடுநோய்கட்கெல்லாம்
போககல்மருந்துசொல்வோம் புலத்தியாபொருந்தக்கேளே. (௧)

பொருந்துமோருந்திக்கீழே புகன்றெழுஞ்சுழிமைப்பற்றி
எழுந்ததோர்நாடிதானு மெழுபத்தீராயிரந்தான்
தெரிந்ததோரிவற்றிற்பத்து திசைநாடியிவற்றில்மூன்றால்
மரித்ததோர்வாதபித்தம் படரையமறிந்துபாரே. (௨)

அறிந்துமேநாடிதன்னை அடைவுடன்கருதவேண்டி
எறிந்ததோரிடைதான்வாதமியல்புடனாம்பில்நிற்கும்
தெரிந்துகொள்சுழிதானையஞ் சேர்விடமெங்கேயென்னில்
பிரிந்துகொள்மலமாம்வாதம்பேர்பெறுகீராம்பித்தம் (௩)

பித்தத்தின்கீழையம் பூண்டுமேவிந்திற்சேரும்
குற்றமேசேருமையங் குறிதனைக்கூர்ந்துகாணும்
பித்தத்தைப்பிரிந்துநன்றாய்ப்பேசுவோம்மேதம்போக்கி
பத்தனைதக்குறியாயெண்ணிப்பரிவுடனறிந்துபாரே. (௪)

பாப்பாயிடைதான்சேரு பரிவுடனிடதுகாலில்
காப்பாமக்கமாறிக்குபாலத்திற்சாடிப்பின்னும்
சாப்பாவலக்காத்திற் சார்ந்திடும்பின்கலைதான்
மேப்பாவிடக்காத்திற்பொருந்திப்போஞ்சுழினைகேளே (௫)

கேளப்பாபருவமத்திசுழினையாங்கிமேழூன்றில்
நாளப்பாநவதாதாதிநடக்கிடும்நாடிபாரு
தேளப்பாநாடிபத்துந்தெசவாய்வுடனேசேரும்
சூளப்பாதசதானங்கள்சொல்லுறேன்சொல்லுறேனே. (௬)

வேறு.

தாதுமூலம்.

சொல்லுறேன்காமியந்தான்குதிக்கால்சந்து,சொற்பெரியவுந்தியை
த்தான்பறறிநிற்கும்சொல்லுறேன்புருவமத்திகாதுமூக்குதலைகபத்தில்
தானின்றுதுட்ர்ந்துமாறும், சொல்லுறேனுயிர்த்தெழுந்த நாடிமாறில்
சோதிக்கில் தசதானந்தோன்றுதையா, சொல்லுறேன்சாகான்காண்
பிணிதான்திருந்துஞ்சகிறவிபாதனைச்சூட்டுறேனே. (௭)

பட்சக்குறி.

அஞ்சியெழும்வாதபித்தமுயிர்தானப்பா சூட்சமாய்த்தன்றியது
சுழன்றுதேய்ந்து, மிஞ்சியேமத்திமத்தில்சூலுநித்தம்மில்மேவியேமார்
புனளேவாசகுமமதில், அஞ்சியேபட்சமொன்றிலடங்குஞ்சிவனாகராவ
வத்தையிதுவறிந்துவிந்த, பஞ்சியேசூத்திரமாம்வாதபித்தம் பக்குவத்
தைநன்றுகப்பார்க்கநன்றே. (அ)

திரிநாடிநிதானக்குறி.

வேறு.

அறிவதுவாதந்தானுமாத்திரையனாதானேடில்
செறிவதுபித்தமப்பாசேர்சமனென்றுயப்பின்னும்
பிறிவதுவையந்தானும்பிரண்டதுகால்தானேடில்
அறிவதுசமமதாகுமயக்கமுமில்லைகாணே. (௯)

வாதமீறினல்.

காணப்பாவாதமீறில்காலகைகள்பெருத்துநோவும்
பூணப்பாகுடல்புரட்டுமலசலம்பொருமிக்கட்டும்
ஊணப்பாகுளிருங்காய்ச்சலுடம்பெல்லாங்குத்தும்வாய்வு
[illegible]ணப்பாகுதமிறுக்கும்வியர்வையும்வேர்க்குந்தானே (௰)

பித்தமீறினல்,

தானென்றபித்தமீறில்சடமெல்லாங்காந்தல்காணும்
ஊனென்றவாந்திவாய்நீருறியேயொழுகுஞ்சாலம

வானென்றமார்ட்டிலேகுமண்டையிற்குத்துண்டாகும்
தேனென்றவிக்கல்மூர்ச்சைசெவியடைப்புண்டாம்பாரே. (௧௧)

சேத்துமமீறினால்.

பாரப்பானையமீறில்பாசத்தினனல்தான்மீறும்
சோப்பாவிளைக்குந்தேகநெஞ்சுடன்விலாவுநோகும்
தாரப்பாசுரமூக்காயுஞ்சாதமுங்வெறுக்குநாளில்
ஓரப்பாவிரத்தக்கக்குமுடல்வற்றுஞ்சாமபோமே. (௧௨)

நாடிமூன்றுமறிய.

ஆமப்பாவாதந்தானுமனநடைகோழியாமை
தாமப்பாபித்தங்கானுந்தவளையைப்போலேபாயும்
சாமப்பாவையந்தானுஞ்சர்ப்பம்போலோடுமோடும்
நாமப்பாகண்டுசொன்னோம்நரம்பொன்றில்நாடிமூன்றே. (௧௩)

வாதபித்தசேத்தமநிறம்.

மூன்றுபேர்நிறமுஞ்சொல்வேன்முதல்வாதங்கறுப்புசெம்மை
யான்றியபசுமைபசசைமஞ்சளாயிருக்கும்பித்தம்
தோன்றியவெண்மையப்பாசோர்விலாவையமாகும்
ஊன்றியநிறங்கள்சொன்னேனுத்தமாறிவர்தானே. (௧௪)

பஞ்சபூதக்கூறறிய.

தானென்றபஞ்சபூதஞ்சரீரத்திற்கேளுகேளு
பேனென்றதசைகளெல்லாம்பிருதிவியுமறுப்பாரு
மானென்றவிரத்தந்தண்ணீர்மைந்தனேயப்புவாகும்
தேனென்றவெதுப்புதானுந்தேயுவின்அறிவுகூறே. (௧௫)

வாதபித்தசேத்துமமிருப்பிடம்.

அறிந்திடுமெல்லாமொன்றுயாவிக்குமதிர்வாணந்தான்
செறிந்திடும்பித்தந்தானுஞ்சேர்ந்திடுநாவிலேதான்
முறிந்திடுவன்னிதானுமூண்டிடுங்கண்ணிலேதான்
பறிந்திடுமவாய்வுதானும்பரிசிக்குமெங்கும்பாரே. (௧௬

பாரப்பாகாதிலேதான்பரிசிக்குமொன்றும்மைந்தா
போப்பாவாதவாய்வுவப்பனேபித்தம்வன்னி
ஆரப்பாசேத்மவாய்வுமப்பனேவாதபித்தம்
நேரப்பாவையமப்புநிறைந்தவையிதுமூன்றுமே. (௧௭)

இதற்குஆதாரம்.

ஆமப்பாமூன்றுபேர்க்குமாதாரம்வாயுவாகும்
ஏமப்பாவாயுசேரிலெண்பிலமுடைத்தாயிற்கும்
வேமப்பாவன்னிகூடில்வெநநீருகுமாளுஞ்
சேமப்பாசித்திநின்றதேயெல்லாமகிளிக்குந்தானே. (௧௮)

ஒன்றோடொன்றுதொந்திப்பு.

தானென்றவன்னிவாய்வுதாண்டிமேற்கொண்டுதானால்
தானென்றசுரத்தாலோடிக்கனதாபமிகுதியாகும்
தானென்னவாயுவோடு அப்புவுஞ்சாருமாகில்
தானென்றசீதருட்சைசார்ந்திடுந்தப்பிலாதே. (௧௯)

தோஷம்அசாத்தியமறிய.

தப்பிலாத்தோஷந்தானுஞ்சார்ந்திடும்வாறுகேளாய்
கப்பிலாவன்னிவாதங்கருக்தோஷஞ்சாத்தியமாகும்
செப்பிலாப்பித்தத்தோடுசேரநல்வெண்மையாகி
செப்பிலாவையத்தோடுசெலப்பெறும்வாய்வுமாமே. (௨௰)

ஓசை.

வாய்வுதானடங்கிற்றானல்மைந்தனே தோஷம்போகும்
வாய்வுதானுப்பிற்றானலமண்ணொடுநீருமொன்றும்
வாய்வுதான்சலந்தாண்டால்மைந்தனேவன்னிமாளும்
வாய்வுதானண்டஞ்சேரில்மண்டலவோசையாமே
(௨௧)

விழி-நாசி-நாவு-நிதானக்குறி,

ஆமப்பாவோசையேழுமலரொளிவிழியைந்தாகும்
தாமப்பாநாசிமூன்றும்நாவினிவிரண்டதாகும்
ஓமப்பாவிந்தவுண்மையுணர்ந்தவர்யோகியாகும்
வேமப்பாநாசிதன்னில் விழுங்குறிவிளம்பக்கேளே. (௨௨)

இடைகலைசாநிதானம்.

கேளப்பாதினந்தான்மூன்று கெடியிடைகலைதான்பாயில்
மாளப்பாபருவமூன்றில் மறலியூர்புகுவான்பண்பாய்
நீளப்பாதினமிரண்டு பின்கலைதானேபாயில்
மூளப்பாதேகந்தானு மூவாண்டில்மரணமாமே. (௨௩)

பின்கலை-உபயம்.

மரணமாந்திங்களொன்றில் மைந்தனேகண்டுகொள்வாய்
மரணமாமூக்குவிட்டு வாய்வழிவாய்வுபாயில்
மரணமாந்தினந்தான்மூன்றில வளம்பெறவழிந்துபாரு (௨௪)
மரணமாமவக்கன்மூன்றும் வற்றிசைபட்சமொன்றே

வாய்நீர்மும்மலக்குறி.

ஒன்றான வாயில்நீருற்றிரவிமேலுமிய
நன்றாகத்தானு மிரவிமறைந்திருக்காக்கால்
பொன்றாமூன்றுநிக்கபொருந்தவுடன்றொன்றிடுவார்
ஒன்றுகநிழலலையில் வீழ்வர்காணபட்சமிரண்டே. (௨௫)

நிழற்குறி-தோஷக்குறிநிதானம்.

வேறு.

காணப்பாதோஷங்கள்பிறக்கும்போது காணுநீகுறிசொல்வோம் கருதிப்பாரு, தோணப்பாவுன்னுக்குவிசழவறண்டு சககாணதாதுவி வைகருக்குமாகில, வீணப்பாநினமூன்றில்மரணமாகு மேலானவன்னி க்குத்தோஷமென்பார், ஊணப்பாவற்றிநின்றபித்தத்தோர்க்கு வுடம்பு பருத்துநின்னுலுவையக்கேளே. (௨௬)

காலநிதானம்-இளைத்ததேகம்-சிவகளை.

கேளப்பாமதியாறிற்சாவுண்டாகுங் கேடிலையத்தாலிளைத்ததேக மானல், காளப்பாதிங்களொன்றிற்சாவார்சாவார் கலமானசிவசநானுட் டகம்களு, வேளப்பாகாளேறிசடங்குதானுல் மேன்மையுடன்சிவகளை விடுபடாது, தாளப்பாகீழ்நோக்கிநடக்குதானுல் தவறுவருஞ்சிவகளை நாடிதானே. (௨௭)

அசாத்தியநாடிமரணக்குறி.

தானென்றநாடிகீழே தாண்டியேவாக்குமாகில்
தானென்றவுயிர்தான்மாளுஞ் சாதகமின்னங்கேளு
தானென்றமூன்றுநாடிதன்வசங்குறைந்துபின்னும
தானென்றநிடங்கொண்டாலுஞ்சாவதுதிண்ணமாமே. (௨௮)

ஆமப்பாவாதபித்தத்தாண்மையையறிந்துகொண்டு
நாமப்பாமருந்துசெய்பலமுறுதோஷந்தீரும்
வேமப்பாபித்தப்போனுல்வெமபிடுமுயிர்தான்காணும்
பூமப்பாவாதநிற்கில்பொன்றிடான்மருந்துகல்கே. (௨௯)

கல்லியமருந்துநாடிநரம்பெலாங்குதித்துப்பொங்கில்
இல்லியமேனின்மேலேயெறிந்துதானேடுமாகில்
மல்லியமாணமில்லைமறைந்ததுகீழேசாடில்
உல்லியவுமிருக்கினமுறறுநீயறிந்துகொள்ளே. (௩௰)

அறிந்திடாவுந்திக்கீழேபமளியாய்க்குதிக்குமாகில்
எறிந்திடாவுமிரையுண்ணுமெய்யுமாந்தோஷமப்பா
செறிந்திடாதுந்திநாலுஞ்சேரிடம்வாய்வுக்கப்பா
மறிந்திடாத்தசநாடிக்குமகத்தானவீடம்பாரே. (௩௧)

வாய்நீர்க்குறி

பாரப்பாகோயுள்ளோர்கள் மக்குவம்பார்த்துநீயும்

வாரப்பாவுமிழ்ந்திட்டாக்கால் மைந்தனே தூரம்போகில்
கூறப்பாதாக்கிற்றூறுற் சாவில்லைசாகான்கேளு
சாரப்பாவிட்டவிழிற்சாவதுசடுதிதானே. (௩௨)

காணப்பாமுறைப்பாடெல்லாங்காண்பதுமந்தத்தாலே
பூணப்பாமந்தமானாற்புகுந்திடும்வாய்வுதானும்
வாணப்பாநோய்கட்கெல்லாம்வாயுவால்வளரும்பாரு
மூணப்பாவப்புவன்னிமுத்தோஷமூன்றும்பாரோ (௩௩)

மந்தம்

பாரப்பாமந்தமுண்டாம் பரிசனமுரைக்கக்கேளு
காரப்பாவிருந்துமேலேகபளிக்குமன்னத்தாலே
வாரப்பாவிறைச்சியாலுமாப்பண்டத்தாலுந்தானும்
சேரப்பாமேதிப்பாலாற்சேர்ந்திடுமேகந்தானே (௩௪)

தானென்றவன்னத்தாலேதலைப்படவுடம்பிசப்பா
தானென்றவுன்னமப்பாதனிப்பழிகொள்ளுமீறில்
தானென்றவன்னமெல்லாஞ்சகலவித்தாகும்பாரு
தானென்றவிதத்துக்கெல்லாந்தத்துவமுரைக்கக்கேளே. (௩௫)

பசை

கேளப்பாவெட்டைபித்தங் கெடியானவாதம்வாய்வு
வாளப்பாவையஞ்சீதம்வளர்ந்திடுமன்னத்தாலே
பாளப்பாவனந்தானும்பசையுடன்பழியுங்கொள்ளும்
வேளப்பாஅன்னத்தாலேமேகங்கள்பிறப்பைக்கேளே. (௩௬)

மேகவுற்பத்தி

மேகங்கள்பிறந்துநின்றவிதங்களைவிளம்பக்கேளு
ஆகங்களிகழ்ந்தபோதுஅப்பனேதினமுஞ்சென்று
போகங்கள்செய்யும்போதும்புகழ்மந்தங்கூட்டும்போது
பாகங்கள்பசியனூடும்பருகுஞ்சையோகந்தானே (௩௭)

சையோகஞ்செய்யும்போதுந்தனிநின்றசுழியேயோடு
மையலோனமூர்தந்தன்னையடக்கியேயனந்தான்கொள்ளு
மெய்யடாவித்துகாணில்விழுவிழப்புண்ணுந்தானு
மையடாமேகத்தாலேவளர்ந்ததுகிரந்திபாரே (௩௮)

கிரந்தி

கிரந்தியால்விரணமுண்டாங்கெடியதிகிரேமேக
மூரந்திருவிரண்டினாலேயுலைவாய்வுச்சூலைதானும்
பாரந்தியமூன்றினாலேபலபலமேகந்தானும்
ஆரந்தியலிங்கத்தாலேதொல்பிணிநோயெய்துங்காணே (௩௯)

தொல்லையாஞ்சுரத்தினாலுஞ்சூழ்கின்றவாயுவாலு
மல்லலையேசெய்யுமாகிலன்னதனைக்காட்டிடாதே
வல்லையவன்னிராசன்வழியதுசெல்லவையானால்
தொல்லையேதில்லையப்பாசூழ்நோயும்வாய்வுத்தானே (௪௰)

வாய்வுருத்திரரோகம்

வாயுவேமிகுந்துதானல்மைங்கனேமேல்மூச்சேறும்
வாயுவேமிகுந்துதானல்மலர்ந்திடுமவிரணமெல்லாம்
வாயுவேமிகுந்துதானல்மலசலமிரண்டுங்கட்டும்
வாயுவினாலேயப்பாவளருத்திரரோகமாமே. (௪௧)

ஆமப்பாருத்திரரோகத்தாண்வைவையுரைக்கக்கேளு
வேமப்பாவெம்பிப்பாய்ந்துமிகநெஞ்சிக்குத்துண்டாகிப்
போமப்பாபித்தந்தன்னைதப்பிப்போகொட்டாமல்
பாமப்பாபேசும்போதுபதையாமற்சாவார்தாமே. (௪௨)

சுகசன்னி

வேறு.

பதையாமற்சாகின்றசுகசன்னிமார்க்கம் பாய்கின்றவிதங்கேளுங வண்பாய்ந்தியும், சிதையாதவெண்ணெயுடன்றீர்த்தமாடிசிரம்பவேதயிர்கூட்டிபொசித்துபின்னும், குதையாதமந்தமுடன்புணர்ச்சிகூடிக் கூடியேவாய்வுதான்காலதசெறி, அசையாதநோயுக்கும்போக்குஞ்செய்யு மயம்பனேசத்தியொடுசன்னியாமே. (௪௩)

வேறு.

சன்னிதான்தோன்றும்போதுசடமெலாம்வேர்வைகாணும்
கன்னிதான்சுகத்தால்மைந்தாகண்கள்தான்சிவப்பேயாகும்
கன்னிதான்காற்றுலேயால்மகத்தானதோஷமாகு
மன்னிதான்சுகத்திலன்னமழிக்திடுங்காயந்தானே. (௪௪)

மூலரோகம்.

காயத்தில்மூலரோகக்கண்டிடும்விதங்கள்கேளாய்
ராயொத்தபசியில்லாமற்பட்சிக்கிலடக்கில்வாய்வு
மாயத்தாலிருத்திக்கொண்டுமலமதையடைக்கும்போது
ஓயத்தகுண்டலிக்குளுட்புகும்வாய்வுகாணே. (௪௫)

அபானன்மூலவகைவிபரம்

காணப்பாவாயுவாலுக்கனத்தவபானன்றன்னைப்
பூணப்பாமலத்தைதக்கட்டிப்புகைமெழக்கருக்கினலும்

தோணப்பாமுனையைப்போலச்சுருக்கிமுன்மலந்தான்வீழில்
ஆணப்பாவபானன்றன்னையழுந்தவேயிறுக்கும்பாரே. (௪௬)

மூலம்வியாதிசெய்யுங்குணம்.

இறுகியமூலமொன்றுவெழுமண்டலமூலமொன்று
வறுக்கியேபுண்ணாய்ச்சீய்தான்வடிகின்றமூலமொன்று
உறுக்கியவாயுவாலேயுதிரந்தான்கட்டிநின்று
தறுக்கியேதிரிச்சினங்கள்தானந்தமூலமாமே (௪௭)

மூலந்தானெழுந்தபோதுமூலத்திற்கனல்தான்மாரு
மூலமேயெழுந்தபோதுமுன்னவந்துகாசமாகும்
மூலமேயெழுந்தபோதுமுழங்கவேயிளைச்சலாகும்
மூலமேயெழுந்தபோதுமுசிவில்லாக்கழிச்சலாமே. (௪௮)

பித்தமேகம்-வேறு.

கழிச்சலென்றகிராணியிலேவிதமாறப்பா
கண்டபித்தமனல்வாதம்வாய்வுதானும்
அழிச்சலென்றவையமுடன்மூன்றுகூடி
யப்பனேமனம்பேதிக்கும்பிலந்தான்போக்கும்
தெழிச்சலென்றவாய்வுதான்மேகபேதி
திறமானமூலத்தின்தோஷபேதி
பழிச்சலென்றசங்காரணபேதியொன்றும்
பாரப்பாவாயுவென்றுமாறுமாச்சே. (௪௯

வாதமேகம்.

ஆச்சப்பாமேகங்கேளுவப்பனேபயித்தியரோகம்
நீச்சப்பாமேகந்தன்னைநிசஞ்சொன்னேன்காணுகாணு
காச்சப்பாமஞ்சள்போலக்கவிணழந்தன்னைக்கண்டால்
வீச்சப்பாபித்தமேகம்விளம்பினார்விரும்பிக்காணே. (௫௰

சேத்துமமேகம்.

விரும்பியசீலைதாதும்வெளுத்திடில்வாதமேகம்
மரும்பியவூஷணந்தானுமயிலதனிறமேயானாற்
திரும்பியவையத்தாலேசேர்ந்திடுமேகமாகும்
சுரும்பியமூன்றுலப்பாதோன்றிடுங்குணங்கள்கேளே (௫௧)

பித்தவாய்வுமேகத்திற்சேர்ந்தால்.

கேளப்பாபித்தவாய்வுகெடியுடன்சேருமாகில்
தாளப்பாஞானமானதமரிலேயெரித்துவேகும்

விளப்பாநீணாக்கட்டும்விழும்பொசிந்துளியுமாறும்
பாளப்பாசிலநோரங்கள்பளிச்செனவிறங்குந்தானே. (௫௨)

வெள்ளைமிகுதியானல்இலட்சணம்.

தானென்றவாயவொதுங்கினல்தண்டிலேநோவுதானும்
வாவென்றமந்தத்தாலேவாயுவிற்புகுந்தேசாடும்
ாகனென்றவெரிச்சல்காணுமகல்லடைப்பாகும்பின்னை
மானென்றவாதவாய்வுமருவிடில்வெள்ளைகாணே. (௫௩)

வாய்வுவொதுங்கினல்.

வெள்ளைதான்மெத்தவீழில்மேனியும்பொருமிக்காணும்
கள்ளமேசரீரமெல்லாங்கறுப்புடனரம்புமோடும்
தள்ளவேதாதுநட்டந்தேகமுமிகுதியுண்டாம்
உள்ளதுசொன்னோநாமுமுற்றுணர்ந்தறிந்துகொள்ளே. (௫௪)

சேத்துமவாய்வுநீரிழிவு.

அறிந்திட வாய்வுவோடேவையம்வந்தெய்துமாகில்
பிரிந்துநீர்பொசிந்திடாதுபிறவெள்ளைவிழுந்திடாது
எரிந்திடுமத்திபோலவிளைப்புடனிருமலுண்டாம்
மரிந்திடும்தகைச்சல்காணும்வலியெழுமேகமாமே. (௫௫)

இருபத்தொருமேகத்திற்குவிபரம்.

வலித்திடும்வாதந்தானும்வளாையபித்தந்தானும்
ஒலித்திடுமகத்தாமேகமொழுகிடுஞ்சலந்தான்மாறிச்
சலித்திடுந்தாகமீறுஞ்சாப்பிட்டாலுடனேகாந்தும்
தலித்திடுமூன்றினேடுமழுங்கிவாயினிக்கும்பாரோ (௫௬

இனித்திடும்வாதமேகத்தியல்புநல்லெண்ணைபோலும்
பனித்திடுங்கள்ளுப்போலும்பதிநீர்போல்நீர்தானேடும்
கனித்திடுமேனியெல்லாங்கனத்திடும்வெளுத்துப்போகும்
தனித்திடுமேகந்தானும்சாற்றியவையந்தானே. (௫௭)

மகோதரம்-பெரும்பாடு.

ஐயமும்பித்தந்தானுமணைந்திடுங்காலந்தன்னிற்
கொய்யுறுமீரத்தந்தானுங்கொப்பளித்தோடுந்தண்டில்
மையுறுகண்ணினர்க்குமகோதரம்பெரும்பாடாகுந்
தோய்யுறுமேகமுண்டாந்தொடர்ச்சியைமுறையாய்க்கேளே. (௫௮)

முறைகேளுமொன்பதப்பா முயற்சியால்வந்தமேகம்
துறைகேளுகற்பத்தாலுஞ் சூழ்கின்றமேகமொன்று
நறைமுத்தகூந்தனல்லாய் நாயகன்மேகத்தாலு
மறைபோற்றுங்கொர்ப்பத்தாலும் வளர்ந்திடுமேகந்தானே. (௫௯)

வளர்ந்திடுங்கொர்ப்பத்தாலு மருவியமேகமைந்து
முளிர்ந்திடும்பதனியாகு முள்ளத்தின்மேகந்தானும்
வளர்ந்திடும்வெள்ளைகாட்டு மாகாதசுரமேகந்தான்
தளர்ந்திடும்மதியுமீறித்தளரொலும்புருக்கியாமே. (௬௰)

தணல்போலக்காயுமேகந் தண்ணீர்தான்பகையாமேக
முணக்கவே புழுக்குமேறி முறுகுமாமேகந்தானும்
பிணக்கவேபசிதான்கெட்ட பேரொழுமேகந்தானும்
வணக்காதசையோகத்தைவர்ச்சிக்குமேகமாமே. (௬௧)

ஆமப்பாவூஷணத்துண்டா மாகியமேகம்பின்னும்
ஓமப்பாபாஷாணத்தா லுற்றிடுஞ்சிலமேகங்கள்
நாமப்பாசொன்னேமிந்த நாடியாஞ்சூத்திரந்தன்னில்
ஓமப்பாவதுதானேமுமைந்துமூன்றென்பதாமே. (௬௨)

ஆகியமேகந்தானுமப்பனேயிருபத்தொன்று
மேகிபகுன்மந்தானுமெழுந்ததோர்விதங்கள்சொல்வோம்
பாகியபித்தத்தோடுவாதமும்பரிந்துசேரில்
வாகியவன்னநீருறும்வாந்தியுமாகும்பாரே. (௬௩)

பாரப்பாவாயுவாதம் பரிவுடனபானன்றங்கில்
ஓரப்பாநாபிதன்னி லுருண்டுதான்மிகவேநோகும்
கோரப்பாநெஞ்சிற்குத்துங் குடலையுமுறுக்கிக்கொண்டு
வாரப்பாவலிக்குமெத்த வாதமாய்வழங்கும்வாய்வே. (௬௪)

வழங்கியவப்புவோடு வாதமுமொன்றேயானல்
தழங்கியவன்னசாரஞ் சங்கிக்கவொட்டாதப்பா
புழங்கியநீதானப்பா பிடியன்னமேறிக்குத்து
முழங்கியமுறுக்குமேறி யுயிரையும்வதைக்குங்காணே. (௬௫)

சூலைகுன்மம்.

வதையுறுவாயுவோடுமேகமுமருவுமாகில்
பதையுறுமலசலங்கள்பரிவுடன்கட்டிக்கொள்ளு

மதையுறுமிடதுபக்க மைந்தனேவலதுபக்கம்
பிதையுறமுறுக்கிக்குத்தும் பெருஞ்சூலைகுன்மமாமே. (௬௬)

குன்மமோரிதுதானுலிற் கூறிலெண்விதமாம்பாரு
வன்மமாநோய்கட்கெல்லா மகாநோய்தான்பொல்லாதாகும்
கன்மமாஞ்சடத்துக்கெல்லாங் காணுங்காணிந்தரோகம்
நன்மையாமாந்தருக்கு நடந்தாலுநாடிடாதே. (௬௭)

பித்தசூலை.

நாட்டியபித்தசூலைநடத்தியவுரையைக்கேளு
ஊட்டமாயன்னமுண்ணார் ருசிதப்பிவாந்தியாகு
வாட்டியகைகால்காதுவகையுந்தன்மேலுநோகும்
நீட்டியவங்கங்கேதா னின்றெரிந்தூருங்காணே. (௬௮)

காணப்பாவாதசூலை காட்டிடுங்குறியைக்கேளு
கோணப்பாகைகால்சந்து குழைச்செல்லாங்கடுத்துநோகும்
காணப்பாசுரமுங்கண்டு கனத்துடன்சுரப்புமாகும்
காணப்பாதேகமெத்தக் கனத்திடுமிளையாதென்றே. (௬௯)

மார்பிற்சூலை.

இளைத்திடுமார்பிற்சூலைக் கெய்தியகுணங்கள்சொல்வோம்
குளைத்திடுங்கைகால்நெஞ்சு குத்துடன்வறண்டிருமும்
தளைத்திடுமார்பிற்சென்று தாக்கிமேலேறிவெட்டு
மளைத்திடுஞ்சீய்தான்கக்கு மாகாதவையமாமே. (௭௰)

ஆகாதவாதபித்த மளைந்திடுஞ்சூலைகேளு
வாகானகால்கைகள் வளமுடன்கறடுகட்டும்
தாகானமேனியெல்லாந் தடிப்புடன்வெடிப்புண்ணாகும்
போகாதசாத்தியமாகிப் புணர்ச்சியாய்க்கொல்லுந்தானே. (௭௧)

தானென்றசூலையொடு சமவாதசூலைகேளு
ஊனென்றசடந்தானேகு முசிதப்புங்கபாலப்புண்ணும்
கானென்றகாலிலாணி யெலும்பெலாங்கறுத்துக்கெட்டு
கோனென்றகழிச்சல்தாகங் குளிர்சுரஞ்சூலையாமே. (௭௨

ஆறுகுஞ்சூலையப்பா வதிலொன்றில்மூன்றுசூலை
வேறுகும்பதினெட்டாகும் வெவ்வேறுசூலையில்லை
கூறுகுமுன்னலப்பா குணங்கள்தான்கோடியாகும்
பறுகுமிவர்கள்பேரைப்பிரித்துரைசெய்வோம்பாரோ (௭௩)

கெர்ப்பவாய்வுகிருமிவடிம்.

பாரப்பாகெர்ப்பகாலம பரிவுடன்வாய்வுதேய்வு
சோப்பாவுந்தியோடு சென்றிடுங்கருத்தான்மாளும்
வாரப்பாபுழுத்தானுண்ணில் மலடெனச்சொல்வாரப்பா
ஆரப்பாவிதனைப்போக்கி லாண்பிள்ளைசெனிக்குந்தானே. (எச)

செனிக்கின்றகுழவிதானுந் திடனுறப்பறக்கும்போது
கனிக்கின்றசீனிபோலக் கலந்துளளேகட்டிசிற்கும்
பனிக்கின்றவிடுப்புகைகால் பரவியேநொந்துகுத்தும்
தனிக்கின்றபசிதான்போகுந் தடித்திடும்முதரம்பாரே. (எரு)

பாரியவாய்வுதானும் பரிவுடன்குழிதான்சேரில்
தாரியகழிச்சலாகிச் சதாகித்தமுறுமிச்சாடும்
வாரியதேகமெல்லாம் வலியெழுமிடைதானேகும்
ஆரியனெனக்குச்சொன்ன ராய்ந்தவர்சித்தர்தானே (எசு)

கெர்ப்பசூலே.

தானென்றகெர்ப்பத்தோடு தரித்திடுசோரைக்கட்டில்
வானென்றவித்துப்போலே வாயுவுமுருளும்பாரு
ஊனென்றபசிதான்போகு மூளைத்துதாணிரைச்சலுண்டாம்
மானென்றகழிச்சல்மீறும் வருஞ்சூதவாயுவாமே. (எஎ)

சூதானகெர்ப்பகாலஞ் சுத்திதான்மிகுந்துகொள்ளில்
வாதானமேகமீறி வழங்கியேவெறுப்பிக்குங்காண்
போதானவுடம்பதெல்லாம் புண்போலமிகவுநோவும்
தீதானமயக்கமாகி சினிர்ச்சீவனுகுவானே. (எஅ)

கெர்பபசூலே.

ஆகின்றவாறுசூலே கெர்ப்பத்தில்வாழ்ந்தநோய்காண்
பாகின்றசுவைதான்சூழல் பதித்திடுங்கருவுமப்பா
வாகின்றதிதுதான்போக்கில் மலடிதான்பெறுவர்பிள்ளை
ஆகின்றநோய்கட்கெல்லா மறைந்திடுமுறைப்பாடாமே. (எகூ)

கெர்ப்பசன்னி.

முறையானகெர்ப்பந்தன்னில் முயன்றதோர்சன்னிகேளு
உறையானசேனீர்க்குள்ளே யுறைந்திடில்வாய்வுமீறில்
இறையானதிரேகம்வேர்க்கு மேலெலாமயக்கமாகும்
துறையானமலந்தான்கட்டுஞ் சோபிக்குந்துணிந்துபாரே (அ௦)

பாரப்பாமாதர்க்கெல்லாம் பச்சுடம்பாகுங்காலம்
தாரப்பாவனுபவிப்பன் தனிகாடிதன்னையுண்பான்
ஆரப்பாமாங்காய்தின் பாளப்பனைமாவுந்தின்பாள்
கூரப்பாசன்னியெய்துங் கொண்டிடுஞ்சன்னிகேளே· (௮௧)

கொண்டிடுமலடிக்கப்பா கூடிடுமெட்டுச்சந்நி
வண்டிதானதிர்காலத்தில் மாத்தின்பன்மோர்தானுண்பன்
தண்டியேயணைவாள்பின்னுந் தனிச்சூதக்காயுத்தின்பன்
ஒண்டியபெண்களுக்கு வோரெட்டுச்சன்னியாமே. ௮௨)

ஓரெட்டுசன்னியப்பா வுற்றதுபெண்களுக்கு
வாரெட்டுப்புருஷனுக்கு மகத்தானசுகசன்னிதான்
நேரெட்டுப்பார்க்கும்போது நெகிழ்ந்துவெவ்வேறாகும்
பாரெட்டுமெச்சவேதான் பகர்ந்திடுங்கண்ணோய்கேளே. (௮௩)

கண்ணுள்வியாதிவருங் குணம்.

கேளப்பாபொடிச்சுட்டாலுங் கிளரவேவெயில்காய்ந்தாலும்
வாளப்பாமின்னார்தம்மை மருவியேநித்தநித்தம்
காளப்பாமுழுக்கில்லாதால் கண்ணினாற்கனல்தான்பார்த்தால்
தாளப்பாபாஷாணத்தால் தானெழுங்கண்ணோய்பாரே. (௮௪)

கண்ணினோய்தானுண்டாகுங் காரணமின்னஞ்சொல்வோம்
பண்ணனமேகத்தாலும் பகர்வெட்டைவாயுவாலும்
தண்ணனவப்புவாலுந் தனிமலக்கட்டினாலும்
புண்ணனவிரணத்தாலும் போடுநற்காரத்தாலும் (௮௫)

காரமாஞ்சாரத்தாலுங் கடுரவிதுன்பத்தாலும்
நீரமாஞ்சாக்குசுட்ட நிலையுறுபுகையினாலும்
வீரமாம்பாஷாணத்தால் விளம்பிடும்ரோகத்தாலும்
சீரமாமிவற்றாற்கண்ணிற் செனித்திடும்வியாதிதானே. (௮௬)

பதினெட்டு குட்டத்திற்கும் விபரம்.

வியாதியாமூவாறுக்கும் விளங்கியகுட்டங்கேளு!
சுயாதியாமேகத்தாலுஞ் சூழ்கின்றகிரந்தியாலும்
பயாதியாமாறதாகும் பலவண்டினாலேயெட்டாம்
மயாதியாம்பூழுவால்நாலு மையமாம்பத்தெட்டாமே. (௮௭)

ஆமப்பாநோய்கட்கெல்லா மரசுதான்மூன்றுநாடி
காமப்பால்வளர்ந்தெந்நாளுங் கருவினைக்கலந்துசேர்ந்து

வேமப்பாவெந்துநீறி விடவெல்லாவமிழ்ந்துபின்னும்
சாமப்பாபிறக்குமந்தத் தாதுவின் விளககங்காணே. (அஅ)

காணப்பாநாடிசொன்னேன் கலந்திடுங்கருவுஞ்சொன்னேன்
தோணப்பாநோயுஞ்சொன்னேன் சூட்சமும் வகுத்துச்சொன்னேன்
பூணப்பாவவத்தைசெய்யும் பூட்டையும்விரித்துச்சொன்னேன்
வீணப்பாசொல்லவில்லைவிதிமுறைவணங்கிப்பாரே. (அகூ)

கேட்டிடுநாடிபத்தில் கெடியெழுநாடிதள்ளி
நாட்டிடுநாடிமூன்றில் நயம்படுமிடையேலாத
மாட்டிபின்கலைதான்பித்த மையமுஞ்சுழிதானாகும்
வாட்டிடுமலமேவாத மருவிடும்பித்தநீரே. (கூ0)

பித்தத்துவையவிந்து பிரித்தனர்பூதங்கேளு
உற்றுடன்வாதம்வாய்வுவோங்கியபித்தந்தேய்வு
சுற்றற்றவையேதண்ணீர்சோர்விலாவாணன்வாதம்
பற்றற்றபிராணன்பித்தம் பகையுறுசமானனையே. (கூக)

ஐயமேயிவர்கண்மூன்றுலழிக்கவுமாக்கலாகும்
ஙையுமேயொன்றில்மூன்று நடந்திடுநல்வாநாகில்
மையுறுங்கழுவுக்கெல்லாம் வாசல்காப்பவரேயாகிச்
செய்யுறுந்தொழிலுக்கெல்லாஞ் சித்துடன்சந்துமாமே. (கூஉ)

ஆமப்பா யெழுபத்தீராயிர நாடிபத்தாஞ்சொன்னேன்
சோமப்பாவுந்திகீழே சுழிதனைப்பற்றிநிற்கும்
காமப்பால்விளைத்தெங்காளுங் கருவியையவளர்த்துப்பின்னும்
சாமப்பாபிறக்குமந்தத் தாதுவின்வழக்கந்தானே. (கூ௩)

சுத்திவகைரசச் சுத்தி.

வளர்ந்திடுந்தாதுதன்னைவகையதில்துகையைச்சொன்னேன்
வளர்ந்திடும்வியாதிக்கெல்லா மணியொடுமருந்தைச்செப்ப
வளர்ந்திடும்சரக்கையெல்லாம் வகைவகைசுத்திகேளு
வளர்ந்திடுநோய்கட்கெல்லா,மருந்தினலொழியுங்காணே. (கூச)

வேறு-

காணப்பாசூதமொருபலந்தான்மூன்று கல்வத்தில்மத்தித்தேமஞ்சட்
டுளால், தோணப்பாமத்தித்து வெட்டடையின்தூளு சுகமான வெற்றி

லையின்சாறும்விட்டு, ஊணப்பாதனித்தனியே கடிகைமூன்று வுறத் தேய்த்துத் திரும்பவதை யூறப்போட்டு, பூணப்பாதாழைநீர் மலாக்கா ய்நீரும்புகழானசெம்பரத்தம் பூவின்சாறே. (கரு)

சாறுகும் வெற்றிலேச்சாற் பழுபாகற்கிழங்குந் தனித்தனியேயைங் கோலச்சாறுங்கூட்டி, வாறுமற் சித்திலேப்பால் கரிப்பான்சாறும் வாயு வறுஞ்சாரணையின்சாற்றஞ்சாறும், கூறுகுங் கொன்றையிட பட்டைச் சாறுங் கொத்தோடே மும்மூன்றுங் கடிகைமாத்தி, வாறுகவிப்படியே மத்தித்தாக்கால் வாலோசமாகும் மாமைந்தாபாரே. (கசு)

இரசம் இருபத்தைந்திற்கும் சுத்திவகை.

பாரப்பாவிருபத்துவைந்துசுத்தி பாடுகிறேன் திரிகடுகு திரிபலேயு மிக்க, சீரப்பாமாமஞ்சள் கற்கண்டுசொக்கையுஞ் சீரான சம்பழமுமுந் திரிகையுடனே, பேரப்பரும்மட்டி பொன்முசுட்டைநாரி புளியாரை க்கொட்டிவேலிமணத்தக்காளி, நீர்ப்பாகற்றுழை வாயவிளங்கம்கெந்த நேர்ந்தகருஞ் சீரகமுங்கோஷ்டந்தானே. (கஎ)

கோட்டமொடு நாயுருவியிருபத்தைந்துங் கூரான நீர்கொண்டு இ யாழங்கொண்டு, மாட்டமுடன் மத்தித்துகடிகைமூன்றுவப்பனே வெ வ்வேறே செய்தாயானல், ஊட்டலாங் குளிகைக்கும் விஷத்துக்கெல் லா முத்தமனேவேதையாநோயுந்தீரும், பாட்டெல்லாஞ் சூதத்தாலல் லோ சித்தர் பாடினர் நூல்தோறும்பாடினரோ. (கஅ)

கெந்தக சுத்தி.

பாடினதோர் கெந்திக்குச் சுத்தியென்ன பசுவினெய்யிலிட்டுரு க்கிப் பாலிற்சாய்க்க, ஆடினதோர் சுத்தியவிழ்தத்துக்காகு மப்படியே யேழுதரமுருக்கிச்சாய்ப்பாய், நாடினதோர்மனேசிலேயின் சுத்திசொல் வோம்நறுக்குவாய் பணம்போலே நன்றாய்நீதான், மூடினதோர்கிளிக ட்டியாட்டுநீரில் முதிரவேதோளாந்திரமெரித்துவாங்கே. (கக)

மனேசிலேசுத்தி - தாளகசுத்தி.

எரித்திடுவாயுழுந்து வெந்ததண்ணீர்விட்டு வெடுத்திடுவாய்மனே சிலேதான் சுத்தியாச்சு, மறித்திடிலோ வில்லேயப் பாதுறைக் கெல்லா மாகு மகத்தான தாளகத்தின் சுத்திகேளு, பறித்திடுவாய் பணம்

போலேதாளகத்தைவெட்டி அருட்சீலைதனைமடித்துக் கிளிதான்கட்டிஅரித்திடுவாய் தோளாந்தரந்கோமயத்திலு மப்பனேகாடியதிலவித்திடாயே.   (௧00

சாதிலிங்கசுத்தி.

அவித்திடுவாய்சுண்ணநீர்பூசினிக்காய்நீரிலாவின்பா லரசம்பட்டைக்கியாழத்தாலும், அவித்திடுவாய்மூன்றுதினமூறப்போட்டுவாகாரவெடுத்திடவேசுத்தியாகும், அவித்திட்டுவசாதிலிங்கஞ்சுத்திகேளு வப்பனேகுப்பிவைப்பைகொறுக்கித்தட்டி, அவித்திடுவாய்பழச்சாறதில் முலைப்பால்தன்னிலடைவாகவிருசாமமூறப்போடே.   (௧0௧)

நாகசுத்தி.

ஊறவேலிங்கமதுசுத்தியாகு மூட்டுவாய்துறைக்கெல்லாமுறைத்துப்போகும், சீருகின்றநாகசுத்திதன்னைக்கேளு செப்பரியவெண்மையாம்பாலுமாகு, மீறவேமோராகுங்காடிநீராம்வேணமட்டும் கோமயமாம்பழச்சாறுகும், வீறுனவெருக்கம்பாலிவைகள்தன்னில் வெந்துருக்கிச்சாய்த்திடவேசுத்தியாமே.   (௧0௨)

வெள்வங்கசுத்தி-வெள்ளைப்பாஷாணசுத்தி.

சுத்தியென்றநாகம்பாமணிகட்காகுஞ் சூதத்துக்காகுமதுநீற்றுக்காகுஞ். சித்தியென்றசெந்தூரமருந்துககாகுஞ் சித்தரெல்லாஞ்சுத்திதனைத்திறந்தாரில்லை, பத்தியுடனிருவங்கமிப்படி தானுருக்கிப்பாங்காகச்சாய்த்திடவேசுத்தியாகும், வெற்றியுறும்வெள்ளைக்குச்சுத்திசொல்வேன்வெட்டடாபணம்போலேபொடியாய்த்தானே.   (௧0௩)

எலிபாஷாணம்.

தானென்றபொடியதனைகிளிபோற்கிட்டித் தனிச்சுண்ணநீர்க்குள்ளேதோளாந்தரமாட்டு, தேனென்றவாவின்பால் சாணிப்பாலாந்திறவாமல்முடியதை பெரித்துவாங்கு, வாமென்ற பாஷாணநல்லசுத்தியாகு மாட்டுவாய்துறைக்கெல்லாஞ்சித்தியாகும், தீனென்றவேலிவிஷத்தின்சுத்திகேளு சிறுகீரையாவின்பால்காணிச்சாறே.   (௧0௪

நாபிசுத்தி.

சாறுகளிற்றோளாந்திரமாகவாட்டித் தயவாகவெடுத்திடவேசுத்தியாகும், வேறுகுநாபியிடசுத்திசொல்வேன்வெண்பருத்திச் சாற்றிலிருசாமம்போட்டு, மீறுமற்கோமயத்திலிப்படியேசெய்துமீண்டு மதையே

ரண்டவிலையிற்சுத்தி, மாறுமலிலைவாட்டியெடுத்துக் கொண்டு மைந்த னேதுறைக்கெல்லாமாட்டுமாட்டே. (௧0௫)

மாட்டுவாய்சீந்தியிடகியாழுத்திட்டு மருவியதைத்தோளாந்திரமெரித்துவாங்கி, ஊட்டுவாய்கோமயத்தாற்கழுவச்சுத்தி யுற்றெருக்கம்பாலிலேயூறப்போட்டுக், கோட்டுவாய்கோப்பாலிற்கழுவச்சுத்திகுற்றமறுநாபிசுத்திகூர்ந்துகேளு, ஆட்டுகின்றவாப்பொடியின்சுத்தி தன்னை யறைகிறேனன்றாகவறைகிறேனே. (௧0௬

அரப்பொடிசுத்தி.

அறைகிறேனயக்கிண்ணியொன்றுவாங்கி யப்படினெயெள்ளெண்ணெயதற்குள்விட்டுக், குறையாமலொருசாமம்வறுத்துநன்றாய்க் குமூறவேசாறுவிட்டுக்கழுவச்சுத்தி, முறையாகக்கருவேலின் பட்டைச்சாற்றில் மூசியாமலிருசாமம்வேகவைத்து, நிறையாகக்காடியிலேகழுவிப்போட்டுகீட்டுவாயச்சுத்திநிலைத்தபோக்கே. (௧0௭

அப்பிரகசுத்தி.

போக்காகவப்பிரகச்சுத்திதன்னைப் பூட்டுகிறேனப்பிரகம் படிதானென்று, வாக்காகக்கோமயந்தான்படிதானமூன்றுவகைகண்டு சமனுகவிரவிவைத்து, வீக்குவாயிரண்டுபடிநீர்தான்வற்றவெந்தபின்புசுனையுள்ளநெல்லிற்சேர்த்துத், தாக்கியேகிளிகட்டிப்புளித்தகாடி தனில்விட்டுக்கசக்கிடவேசுணையும்பாரே. (௧0௮)

தாம்பிரசுத்தி.

கரைத்தந்தக்காடியெல்லாந்தெளியவைத்துக் கலங்காமலிறுத்தப்பாலுலரவைத்து, நினைத்ததொருசெந்தூரப்பற்பம்பண்ணு நிலைத்தெந்தநோயேனுநீறாய்ப்போகும், தனைத்துதொளிர்தாம்பிரத்தின்சுத்திகேளு சல்லிபோற்றாம்பிரத்தைநறுக்கிவாக்கி, நினைத்திடுவாய்புளித்தமோர்காணச்சாற்றில்கீயேழுநாரங்காய்ச்சித்துவைத்திடாயே. (௧0௯)

காந்தசுத்தி.

துவைத்திடுவாயேழுவிசையெருக்கம்பாலிற் சொல்லுறேனல்லெண்ணெய்கோமயத்தில், சுவைத்தியாம்தாம்பிரத்தைச்சுட்டுசுட்டுசுட்சமாம்தாம்பிரசுத்தியாச்சு, நிவர்த்தியாம்லோகங்கள் பொன்னுமாகும் நேர்மையாந்துறைக்கெல்லாமாடுமாடும், துவைத்திடவேகாந்தசுத்திசுட்டநீகேள் துசிப்பற்றுங்காந்தத்தைத்துண்டாய்வெட்டே. (௧௧0)

நிமிளைசுத்தி.

வெட்டியதோர்காந்தத்தில்சவ்வீரச்சாறு வெகுநாளைக்காடியுடன் புளித்தமோரில், கொட்டிடுவாய்மூன்றுதினம்வற்றவற்றக்கூட்டாது றைக்கெல்லாம்லோகத்தோடும், மட்டில்லைகாயசித்திலோகசித்தியாகு மப்பனேநிமிளைசுத்தியறையக்கேளு, வட்டியுநூநால்வகையுநொறுக்கிக் கொண்டு வாழையிடஇழங்கினீர்வாங்குவாங்கே. (௱௧௧)

அத்தகசுத்தி.

வாங்கியேநிமிளையிட்டுவெரித்துமைந்தா வைத்திடவேசுத்தியாம யக்கமில்லை, பாங்கியாந்துத்தத்தின்சுத்திகூட்டப் பணம்போலேநொறு க்கியதைக்கிளியாய்க்கட்டி, ஆங்கியாமமூரியிலேயேழுசாம மாவினிட நீர்தனிலேரண்டுசாமம், தேங்கியதைத்தோளாந்தாமெரித்துவாங்கு சித் தியாஞ்சுத்தியாம்லோகத்துட்டே. (௱௧௨)

குக்குல்சுத்தி.

ஊட்டவுந்தான்குக்குல்தனைச்சுத்திசெய்து வுத்தமனேயிடித்தத னைக்கிளிதான்கட்டி, மூட்டுவாய்திரிபலையுந்தேவதாரமுதிர்ந்து நின்ற பேய்ப்புடலங்கியாழஞ்செய்து, ஆட்டுவாய்தோளாந்தாநாலுசாமமதன் பிறகுருத்திரபத்திரியுங்கூடக், காட்டுவாய்நிம்பத்தோல்கியாழம்வாங்கி க் காய்ச்சவேயதினிடகளங்கம்போமே. (௱௧௩

தொட்டிசுத்தி.

களங்கம்போமாவின்பால்நாலுசாமம் காய்ச்சிடவேசுத்தியாக்கல ருஞ்சித்தி, களங்கம்பொந்தொட்டிக்குச்சுத்திசொல்லிக் கட்டிதனைநொ றுக்கியதைக்கலத்திலிட்டுக், களங்கமறநெய்த்தேனுஞ்சரியாய்ச்சேர்த் துக் கலக்கியேயூறவைப்பாயெட்டுநாள்தான், களங்கறவுந்தோளாந்தா க்காணச்சாற்றில் காய்ச்சடாதொட்டியங்கேசுத்தியாச்சே. (௱௧௪)

கர்ப்பூரச்சிலைசுத்தி.

ஆச்சப்பாகர்ப்பூரச்சிலையைவாங்கி யடைவாகநொறுக்கியதைக் கி ளிகட்டிவைத்து, பாச்சப்பாவாவின்பால்தோளாந்தாமாகப் பால்வற்று மட்டுமங்கேயெரித்துப்பின்னும், காச்சப்பாவயக்கிண்ணிக்குள்ளேவை த்துக் கட்டியதோர்சல்லிநீர்தன்னலாட்டு, மூச்சப்பாசலாசத்துசுத்தியா ச்சு மூட்டிடுவாய்துறைக்கெல்லாமூட்டுமூட்டே. (௱௧௫)

நேர்வாளசுத்தி.

மூட்டுவாய்நேர்வாளஞ்சுத்திகேளு முழுமேதிச்சாணியிலேவாள ம்போட்டு, ஆட்டுவாய்கமலாக்கினிதீயாலப்பா வாறவிட்டெடுத்ததனை

த்தோடுபோக்கி, மூட்டுவாய்குற்றமறுஞ்சுத்தியாகு முறவாகுஞ்சரக்கோடுவூடுபந்தாம், நீட்டியேசுத்திவகைமெத்தவுண்டு நினைவுகொண்டிவ்வளவுஞ்சொன்னேன்பாரே. (கக௬)

லோகமாரணம்.

பாரப்பாலோகத்தின்மாரணங்கள்சொல்வோம் பரப்பிலேவிடுகாதேயடக்கியாடு, ஆரப்பாவகையாகச்சென்றோது வடைவாகச்சொல்லுகிறேனடக்காவிட்டு, நேரப்பாவெளரீயந்தாளத்தால்மாளும்நிலையாதகாரீயமனேசிலையால்மாளும்;காரப்பாவுருக்கதுவும் லிங்கத்தால் மாளும் கடியகெந்திதாம்பிரதனைதக்கவ்வுந்தானே. (கக௭)

கவ்வுமடாவெள்ளிதன்னைமாட்டியுண்ணும் களங்கமில்லாப் பொன்னதனைகிமிளையுண்ணும், கவ்வுமடாலோகங்கள்தகடுதட்டிக் காட்டுவாய்தகடுக்குச்சரக்குநேராய், கவ்வவேசம்பிரச்சாறுவிட்டுக் களங்கமறவாட்டியேதகட்டிற்பூசிக், கவ்வவேசட்டிகருள்தக்கடைவைத்துக் கவிழ்த்துமேசட்டிகொண்டுமூடுமூடே. (கக௮)

காந்தசெந்தூரம்.

மூடியேசந்துவாய்சீலைசெய்து முதிரவதைக்கெசபுடமாய்ப்போடுபோடு, நீடியதோர்லோகங்கள்வேறுவேறாய் நீட்டியேபுடம்போடவண்ணமேறும்; ஆடிநின்றகாந்தத்தைச்செந்தூரிக்க வறைகிறேன்சுத்திசெய்தகாந்தத்தைவாங்கி, நாடியொருசட்டிக்குள்ளேசாந்தமிட்டு நயமாகமேற்சட்டிகவிழ்த்துமூடே. (கக௯)

கவிழ்த்தியபின்குழிவெட்டிமூன்றுபத்துக் கனத்தவெருக்குழிக்குள்ளேயடுக்கியந்த, கவிழ்த்துவைத்தசட்டிதனைபெருமேல்வைத்து கட்டடாமுப்பதெருமேலேமூடிக்கவிழ்த்துவதைத்தட்டிநீயெரித்துவாங்கு கனலாறிக்காந்தத்தைவாங்கிமைந்தா, கவிழ்த்தியதோர்பச்சரிசி கழுவிநீரோடு கருவாழைக்கிழங்கினிடசாறுவாங்கே. (க௨௦)

வாங்கப்பாஆவாரஞ்சாறிளநீர்ச்சாறு வகைநாலுஞ்சமனாகவளர்ந்துநீயும், வாங்கடாதினமிரண்டுஆட்டுச்சாற்றால் வடுப்போலப் பிடித்ததனையாறவைத்து, வாங்கடாசட்டிக்குள்ளடையவைத்து மறுசட்டிப்பாலதனைமறைத்துமூடி, வாங்கடாசீலைசெய்துகெசபுடந்தான்போடு வாகாகவாறியபின்னெடுத்திடாயே. (க௨க

எடுத்ததொருவில்லைதனைக்குமுறவேசீ ரிறக்கியதையாட்டியேசெ
ஜபுடமேபோடு, எடுத்திடுவாயாறினபின்காணாயோம்பட்டையிலவங்க
ப்பட்டையுடனெல்லிமுள்ளி, எடுத்திடித்துயிவைசமனாய்க் கியாழம்
வைத்து இயல்பாகஆடியதைச்சட்டிக்குள்ளிட்டு, விடுததிடவேமுன்
போலச்சீலைசெய்து விதமாகமுன்போலப்புடத்தைப்போடே. (௧௨௨)

புடம்போடுவிப்படிதானாலுவாட்டி பேரானபழச்சாற்றால்மூன்று
வாட்டி, புடம்போடுபருத்தியிலைச்சாற்றினாலும் பிசகாமலால்விழுதின்
சாற்றினாலும், புடம்போடுமூன்றுதினமப்பாற்கேளு பிறகுநீநெல்லிமு
ள்ளிச்சாற்றாலாட்டி, புடம்போடுவோர்தினந்தான்சிவந்துபோகும்பே
ரானகாந்தசித்திதிறந்தானன்றே. (௧௨௩)

லோகசெந்தூரம்.

நன்றாகலோகசெந்தூரஞ்சொல்வோம் நட்பாகலோகமுமோர்பல
ந்தான்மூன்று, குன்றாதசூதமொருபலந்தான்வாங்கு கொடுங்கெந்தியிர
ண்டுபலந்தூக்குதூக்கு, ஒன்றாகச்சூதமுடன்கெந்திரண்டு உறவாட்
டுக்கல்வத்தில்கடிகைரண்டு, துண்டாகவிளங்கியதுமயனமாகுந் தூளான
லோகத்தையிதனிற்சேரோ. (௧௨௪)

சேர்த்தங்கேகுமரிச்சாற்விட்டுநீயுஞ்சிதறாமலிருசாமமாட்டிவாங்கி
சேர்த்தங்கேயுண்டைபண்ணியாமணக்கிலையில் திடமாகவமைத்தந்தவி
லைபால்மூட்டி, சேர்த்ததனைரவியில்வைப்பாய் கடிகையீராறுசென்றபி
ன் தீச்சுட்டாற்போலேசூடாம், சேர்த்துநெல்லிற்புதைத்திடுவாய்தினந்
தான்மூன்று திரும்பவதைத்தூளாட்டிச்சிறக்கவாங்கே. (௧௨௫)

வாங்கினதோர்செந்தூரம்தங்கம்போலா மாரணத்திற்செந்தூரமா
கிற்றப்பா, பாங்காகக்காந்தங்கள்லோகம்வெள்ளிபரிவானதாம்பிரங்கள்
கஞ்சந்தங்கம், தாங்கிநின்றமாரணத்திற்செந்தூரஞ்சித்திதாரணியில்வா
ய்திறந்துசாற்றவேண்டாம், தேங்காதமாரணத்திற்சித்தியாகுஞ் செய்ய
டாதுறைக்கெல்லாந்தெளிந்துதானே. (௧௨௬)

அப்பிரேகசெந்தூரம்.

தெளிவானவப்பிரேகசெந்தூரஞ்சொல்வேன் சேர்வாங்குவப்பி
ரேகஞ்சுத்திசெய்து, வளியாகுஞ்செம்பொனெரிஞ்சிச் சாற்றிலாட்டி

மைந்தனேசட்டிக்குள்ளடைபோலப்பி,நெளியாமலப்பிரேகமதன்மேலே வைத்து,நோாகவடையதனைமேலும்வைத்து, அளியாகச்சட்டிகொண் டுகவிழ்த்துமூடி யப்பனேகெஜபுடந்தான்போடுபோடே. (௧௨௭)

போட்டதொருவப்பிரேகந்திரும்பவாங்கிப்புகழாகக்கல்லுறலிற்றூ ளாய்நீதான்,ஆட்டியேவாங்கிபதைமாந்தோலாட்டியடைவாகவச்சாற்று லடைதான்தட்டி, நாட்டுவாய்மாம்பட்டைதேத்தாங்கொட்டை நயமாக ப்பொடியாக்கியோட்டிலிட்டு, மூட்டியடைதனையோட்டில் வைத்துமூ டிமுன்போலேசீலேசெய்துமூடுமூடே. (௧௨அ)

மூடியேபுடந்தீர்ந்துதூளாயாட்டி முன்போலேமூன்றுதரங் கெச புடந்தான்போடு,நீடியேநெல்லிமுள்ளிச்சாற்றுலாட்டி நீரோடுவாழை யிடகிழங்குநீரும்,மூடியேகலந்தாட்டியடைதான்செய்துவுறப்போடுமு ன்போலேபுடத்தில்தியும், நாடியேயிப்படிதான்கெசபுடமேபோடு நல மாகவெடுத்தவனல்வாட்டுவாட்டே. (௧௨௯)

எடுத்திடுவாய்தூளதனைக்குமரிச்சாற்றுலிதமாகஆட்டியதையடை தான்செய்து, தொடுத்திடுவாய்மூன்றுபத்துபுடந்தான்முன்போல் சுக மாகவப்பிரேகமருணன்போலாம்,விடுத்திடுவாய்வியாதிகளையுண்ணவெ ன்றால் வெண்பஞ்சிற்பொறிபட்டாப்போலேபோகும், தடுத்திடுமேயப த்துறைதிணையுந்தள்ளுஞ் சதுரானசகத்திரத்தெண்வியாதிபோமோ. ()

மண்டூரசெந்தூரம்.

வியாதிபோமண்டூரசெந்தூரங்கொண்டால் மைந்தனேவைக்குகிற வரிசைகேளு, நயாதிபோய்ச்சகத்திரமாம்வருஷஞ்சென்ற நத்தங்கள்த னிற்கிடக்குங்கரியகிட்டம், மயாதிபோய்க்கொண்டுவந்து தூளாயாட்டி யப்பனேதான்றிமாக்கரியினலே, நியாதிபோயுமுலேயிலிட்டுச் சிவக்கவூ திநீயாவின்கோமயத்திலூறப்போடே. (௧௩௧)

ஊறியபின்னெடுத்ததனிலூரல்வாங்குவுலர்த்தியதைதூளாக்கிக்கு கையிலூட்டு, மாறியதோர்மண்டூரச்சிவப்புமாச்சுமறுத்துமதைச்செந்தூ ரமாகக்கேளு, வீறுடனேமூன்றுநாள்நாகவல்லிச்சாற்றில் விபரமுடன் சூட்டிடுவாய்வற்றவற்ற,வாறுகநொச்சிச்சாற்வெள்ளாட்டுப்பால்நீர்மை ந்தனேமூன்றுதாங்கொதிக்கவையே. (௧௩௨)

வைப்பதுவுமெப்படிதானென்றுநீயும் வயணங்கேள்வெவ்வேறு தினந்தான்மூன்று, வைத்ததனைவற்றுவித்துப்பின்புவாங்கிவரிசைபெற வொருசாமங்குமரிச்சாறறில், வைத்தாட்டிமடக்கிவிட்டு மேலுங்கீழும் வைப்பதுதானுவிலையால்மறைத்துச்சுத்தி, வைத்திடுவாய்சீலைமண்தான் ரண்டுசெய்து வராகபுடமறுபதுதான்போடுபோடே. (௧௩௩)

போட்டிடுவாய்மண்ரோஞ்செந்தூரமாச்சு போக்கிலேவியாதிகளைப் பிடிங்கித்தின்னும், மாட்டிடுமேமகோதரங்காமாலைபாண்டு வருஞ்சோகைபெருவயிறுவலிமயக்கம், மாட்டியதோரிளைமுதல்மேகந்தானு மாக்கைவலிகிராணியிவையெல்லாந்தீரு, மூட்டிடவேயனுபான மூனாக்கக் கேளு முத்தமனேவியாதிகண்டுவுறவுசேரோ. (௧௩௪)

உருக்குசெந்தூரம்.

உறவுசேருருக்கிலேசெந்தூரந்தன்னை யுணாக்கிறேனுளிப்பத்துவாங்கிவந்து, உறவாகவுலையிலிட்டுவருணன்போல ஊதியதையாவினீரில் வெள்ளாட்டுநீரில், உறவாகச்சமன்கலந்துவைத்தாயானு லுதிருமடாகருக்கதுவுந்தோய்க்கததோய்க்க, உறவாகவுதிர்ந்தபொடியெல்லாம்வாரி யுறவாட்டுக்கரிப்பானிரூட்டிக்காணே. (௧௩௫)

காணப்பாவாட்டியதைவில்லைகட்டி காயவைத்துச்சட்டிக்குளா விலையைப்பரப்பி,பூணப்பாவில்லைதனையிலைமேலிட்டுப்புகழாகப்பின்புமந்தவிலையான்மூடி, ஊணப்பாவில்லைதனைக்காயவைத்து யுறவாகச்சீலைசெய்துவுலரவைத்து, தோணப்பாகெசபுடததிலாட்டிவாங்கி சொல்லுகிறேனேரிலைதாமரையின்சாறே. (௧௩௬)

சாறுவிட்டுஆட்டிநீகெசபுடந்தான்போடு தளிர்க்குமரிச்சாற்றினுற்கெசபுடமேசெய்து, கூறுடனேவெடுத்துப்பார் முருக்கம்பூப்போல் கொள்கியதுசெந்தூரங்கொடியசித்தி, மாறுபடாநோய்க்கெல்லாந்திரிபலையும்வெல்லம் வரிசையுடன்பொடிகூட்டிவைத்துக்கொண்டு, ஆறியதோர்செந்தூரம் பணந்தான்தூக்கியப்பனேதேனிலே குழப்பிக்கொள்ளே. (௧௩௭)

கொள்ளவேதூலவுடல்சூட்சமாகுங் குறைந்திருந்த குஷ்டவுடல் நெய்யிற்கொள்ள, மெள்ளவேபருத்திறுகுமயம்போலப்பாமீறிவருநரைதிரைகள்வெருவியோடும், விள்ளவேநாவேதுபார்வுமேது, மேலோர்கள

யங்கிட்டம்ரண்டுங்கொண்டால், அள்ளவேகுறையாதுகடலிலேற்றமறி ந்துநீலோகத்தையணைத்துஆடே. (௧௩௮)

மிருதசஞ்சீவி.

ஆடவேமிருதசஞ்சீவிசொல்வோ மப்பனேசூதமொன்றுகெந்தி யொன்று; நீடவேகல்வத்திற்சாமமொன்று நீட்டிநீயாட்டையிலேமய னமாகும், மூடவேகறுத்திருத்தியப்பிரேகபறப மூயிரந்தலோகபற்பந் தாம்பிரபற்பம்,நாடவேதாளகமுநாபிலிங்கம் நலமானமனேசிலையுங்கந் குலிட்டம்பாரே. (௧௩௯)

பாரப்பாவத்திதிப்பிலியினேடே பாங்கானவதிவிடையஞ்சொர் ணமாடம், சீரப்பாவிதுவெல்லாம்ரசகெந்தியுடனேசோசமனையிஞ்சிச்சா ற்சிவதைச்சாறும், வாரப்பாசிறுகீரையிவைகடன்னில்மாட்டியேயாட்டி டுவாய்தினந்தானென்று, பேரப்பாகஞ்சாவின்சாற்றினாலும் பொருந்த வேதினமொன்றுபுகட்டியாட்டே. (௧௪௦)

ஆட்டடாபழச்சாற்றிலாரைச்சாற்றி லப்பனேயாறவைத்துக்குப்பி க்கேற்றி-மூட்டடாசீலைசெய்துதாளிக்குள்ளே முதிரவேமணலிட்டுக்கு ப்பிவைத்து-நீட்டடாமேலுமந்தமணல்பரப்பி நீனவாகவிருசாமமெரித் துவாங்கு-மீட்டடாவாரியபின்றாளாயாட்டிமேலானமாத்திரைதான்செ ய்யக்கேளே. (௧௪௧)

கேளப்பாயிஞ்சிநீர்தன்னிலாட்டிக் கிருமையுடன்குன்றியிடைகு ளிகைதான்கட்டி- குளப்பாதோஷமுதற்சன்னிக்கெல்லாஞ்சூட்டிடவேது ஞ்சிநின்றவுயிர்களமீளும், நாளப்பாசூசிகாபரணஞ்சொல்வோம் நாடியு யர்பதின்மூன்றுசன்னிதீரும், வாளப்பாசூதமொன்று காந்தமொன்று வாகானதாம்ரமயம்லோகந்தானே. (௧௪௨)

லோகமுடனப்பிரேகமாறுசேராய்நொறுக்கியந்தைநேர்சமனைய்க்கெ ந்திகூட்டி, லோகமுறுநொச்சிவேர்சித்திரமூலம்நுணுக்கமுடன்சுரியாக க்கியாழம்வைத்து, லோகமுறும்பொடியிட்டுத்தினந்தான்மூன்றுநோக வதையாட்டிநீவாங்கிப்பின்பு, லோகமுறுநாயுருவிகரிப்பான்மித்தைநோ யகலப்பேயத்திகாளிகாணே. (௧௪௩)

காணப்பாசித்திரப்பாலாடை கோட்டான் காந்தையொடுவெ ள்ளைக்காக்கணமுமிக்க, பூணப்பாகாயாத பழுப்பாகல்தாழை புகழ்

ழ்சேர்ந்திச்சாறணையும்பேய்ச்சுரைகளெல்லாம், தோணப்பாபேய்த்துளசியின்வகைநீர்வாங்கித் தோய்த்தந்தநீர்சுவறரவியில்வைப்பாய், நாணப்பாதிணமொன்றுசாரதொன்று நயமாகவிரவியதைரவியிற்போடே. (௧௪௪)

போட்டபின்புபாவங்களின்னங்கேளு புகழ்கோழிமுன்மஞ்ஞைஞு பன்றிவெள்ளா, டேட்டதனின்பித்துகளிலேழுவாட்டி யூறவைத்துதிப்பிலியின்கியாழததாலும், மூட்டவதைமூன்றுநாள் பாவனைதான்செய்து மூசியவனாயெழுசீலைவேர்கியாழத்தாலும், மாட்டவதைபாவனைதான் செய்துமைந்தா வதிற்சமனுப்நாபிதனைச்சமன்றுன்சேரோ. (௧௪௫)

சேர்ந்தகொருசூரணத்தை முன்சொன்னபித்திற்றிரும்பவுநீயூறவைத்தெடுத்துக்கொண்டு, சேர்த்திடுவாயனுபானநோயகள்சன்னிசேவல்கண்டுமுறையுடனேசெய்துநீயும், சேர்த்திடவேயறுசீலை பெருவயிறுகுன்மங் தீராதபாண்டுவுடன்வலிதான்குட்டம், சேர்த்திடநஞ்சயமுகுமிவாதந்தானுஞ்செல்லாதவீக்கமுடன்வறட்சிபோமே. (௧௪௬)

இரசபூபதி.

வறட்சிபோம்வெட்டைபோம்வலிக்குந்திரேகம் மைந்தனேசஞ்சிமகத்தாஞ்சித்தி, இறைச்சியொடுநரம்பெல்லாமமிர்தமூறு மிரதமென்றபூபதியையியம்பக்கேளு, வறட்சிபோமிரசபற்ப-ந்தாம்பிரபற்பம்வாங்காதநாபியிவைநேர்தான்றூக்கி, குறைச்சிடாக்கெந்திரண்டுதிரிகடுகுபலையுங்கூறுகவிவையெல்லாநொறுக்கிடாயே. (௧௪௭)

நொறுக்கியபின்றழுதாழைகண்டங்காலிநொச்சியடாபேய்த்தும்மட்டியிவைகளெல்லாம், நறுக்கியதோர்கொடிவேலிதின்னுப்பாலை நாட்டடாகியாழமிடவோங்கிமைந்தா, சிறுக்கடாயிருபதுநாளாட்டிவாங்கி சீரானவுளுந்திடைக்குக்குளிகைகட்டி, சுறுக்கானசன்னிக்குவீந்தாயானால்தொட்டவுடன்பதின்மூன்றுந்துகள்தீராமே. (௧௪௮)

பஞ்சவத்தியிரதம்.

நீறுமென்றபஞ்சவத்தியிரதஞ்சொல்வே னெருப்பானகாலாக்கினிருத்திரனைச்சொல்வேன், ஏறுமென்றநாபிகெந்திவெண்காரஞ்சூதமியல்பானமிளகுடனேயிடையுந்தாராய், மாறுகின்றமத்தஞ்சாறதுகொண்டாட்டு வகையாகத்தினமொன்றுவழித்துருட்டி, ஆகியேயுலர்ந்தபின்புதூளாயாட்டி யப்பனேசெப்பிலேபடைத்துவையே. (௧௪௯)

காலாக்கினிருத்திரன்.

அடைத்ததொருவொடிகுன்றியிடைதான்றூக்கி யாகாதசன்னிக்
குவளித்தாயானால், உடைத்திடுமேபனிரண்டுசன்னிபின்புவோர்சன்னி
விரோதசன்னியொன்றுகூட, துடைத்திடுமேதோஷங்கள்பலவுந்தீருந்
துரிதானகாலாக்கினிருத்திரன்கேளு, படைத்தசத்திசாரமேவட்சாரந்
தானும் பாங்கானநவச்சாரமிந்துப்பூவே. (௧௫௦)

இந்துவொடுபொட்டிலுப்புவளையலுப்புமியல்பானகாச்சுப்புகல்லு
ப்பாதி, மைந்தனேசரிகூட்டிக்கல்வத்திட்டு மாட்டியதிலோரிடைதான்
சூதம்விட்டு, தொந்தமுறவோர்தினந்தான்மத்தித்துவாங்கிச் சூட்டவே
மேல்மருந்தைத்துறையாய்கேளும், சிந்துவேபெருங்காயங்கடுகோதனதச்சி
லைபுங்கம்வித்துமிடைகோயாட்டே. (௧௫௧)

ஆட்டியதோர்மருந்துக்குள் சூதம்விட்டு அப்பனேமூடியதைத்
தோளாந்தமாக, ஊட்டுவாயபழங்காடிபாண்டத்தில்விட்டுவுறவாகத்தி
னமொன்றுவாத்துவாங்கு; மாட்டுவாய்மத்தஞ்சாற்கொச்சிச்சாறுவா
கானகரிப்பான்சாற்பொன்னத்தக்காளி, கூட்டுபொன்முசுட்டைகொடிவே
லியஞ்சி குறுகவெள்ளைக்கணங்காட்டான்காநதைச்சாறே. (௧௫௨

சாறுகளிலொவ்வொருநாளாட்டிவாங்கு தனித்துவினிப்பாவலைக்
குத்துளாயாட்டி, வீறுபுகழ்மிளகதற்குகோயாட்டிவிரயதைமயிற்பித்
துவராகப்பித்து, மீறிவளர்மீன்பித்துவெள்ளாட்டின்பித்து வெவ்வே
றேதினமொன்றுவிரவினைவகீ, ஊறியபின்னிரண்டு குன்றிவெல்லத்தே
னிலூட்டடாதயிருஞ்சோறுண்ணச்சொல்லே. (௧௫௩)

உண்ணையிலேவெட்டைவந்துமேவிற்றூறு லுடன்றலைமிற்குளிர்ந்
தசலமூறவாகீயு, முண்ணையிலேசன்னிபோந்தோஷம்போகு மூயிர்ப்ப
றியட்டகுன்மங்கவுசிபோகு, முண்ணையிலே பெருவயிறுபாண்டுமோ
டுமோகோகோகிறிச்சினங்களாறுமோடு, முண்ணையிலே சாமூறுங்கார
மூலுமுத்தமனேவேறுவகையுனாக்கிறேனே. (௧௫௪)

சன்னிவாதக்கியாழம்.

உரைக்கிறேன்சன்னிவாதங்கிஷரசத்தை யுத்தமனேசூசமொன்

றுகெந்தியொன்று, கிணைக்கிறதேசரிதாரகாயிமாட்சி கோரணபொன்மா
ட்சிதாம்பிரபற்பந்தானும், தனைக்குயர்ந்தவப்பிரேகஞ்சத்தியவாச்சாரஞ்
சங்குமுடிதாரமெவாச்சாரந்தானும், பெணைக்குயருங்கடகசிங்கி பெருங்
காயம்வசம்புபேய்ப்புடலும்பொன்முசுட்டைகடுக்காய்சுக்கே. (௧௫௫)

சுக்குடனேகஞ்சாவும்விலப்பனையின்மூலந் துஞ்சாதவிம்பத்தின்பி
சினிநோய், பக்குவஞ்சேருந்தமாதாளிச்சாச்றல்பழச்சாற்றுற்றினமி
ரண்டுவெல்வேறாக, உக்கிரமாயாட்டியேகடலைபோலே உருட்டியேதசு
மூலக்கியாழந்தன்னில், தக்கதோரிஞ்சிச்சாறிவற்றிலூட்டு சாந்தம்வரு
ம்வியாதியுடவகையைக்கேளே (௧௫௬)

வடவவனல்ராசம்.

வியாதியெனும்பதின்மூன்று சன்னிதானும் விக்கலுறும்வாந்தி
யொடுவெட்டைதானும், வியாதியெனுங்கரப்பன்முதற்புண்கள்தீருமே
லானவடவானல்ராசத்தைநக்கேளு, வியாதிபோஞ்சுதமொன்று கெந்தி
யொன்றுமேலானவப்பிரேகந்தாம்பிரபற்பம், வியாதிபோங்காந்தமான்
கெந்தந்தாரம் வீருணநீலாஞ்சனமுந்தூக்கே. (௧௫௭)

தூக்கடாகடல்நுரையுமிவைதானாய்த் துடியானஇந்துப்புபொட்
டிலுப்புதூக்கடாவெடியுப்புகாச்சும்புத்தானுஞ்சுகமானஅட்டுலுப்புவை
ந்துநோய், தூக்கடாசதுரக்கள்ளிப்பாலாலோர்நாள் துரிசாகஆட்டிய
தைக்குகையிலிட்டு, தூக்கியேகுழிக்குள்ளே குகையைவைத்துச்சோர்
வின்றிவாய்மூடிவெருவடுக்கே. (௧௫௮)

அடுக்குவதுகுழிகீழுமேலுமப்பா வப்படியேகனல்புடமாயோர்நா
ள்மட்டு, மெடுத்திடுவாய்மறுநாளிற்றூளாயாட்டி யிருக்கட்டுங்குன்றி
யிடையிஞ்சிச்சாற்றில், கொடுத்திடுவாய்மூன்றுதின மேற்பொடியைக்
கேளு கூரானதிப்பிலியின்பொடியைத்தூவி, படுத்திடுமேதனுவாதமு
கவாதசன்னி பாங்கானநடுவாதம்பாருங்காணே. (௧௫௯)

பாருமப்பாதளர்வாதப் வற்றும்வாதம் பரவிநின்றதுடிவாதம்விலா
ங்குவாதம், பாருமப்பாசுழல்வாதம்பிரளிவாதம் படபடத்துமூர்ச்சிக்கு
ம்படரானவாதம், பாருமப்பாவனுபானங்கிபாழக்கேளு பாங்கானவா
மணக்குச்சிற்றுமுட்டி, பாருமப்பாவேர்கொம்புவாதமடக்கிவேரும் பட
ட்சிக்கவிவையெல்லாம்பறக்குந்தானே. (௧௬௦)

சோற்சந்தவயிரவாசம்.

தாமென்றசோற்சந்தவயிரவத்தைச்சொல்வோம் சருவவகையெண்பதுவாதந்தீரும், தாமென்றசூதமொன்றுலோகமொன்றுதாளகமுந்தாமென்றுநிமிளையொன்று, தாமென்றகெந்தியொன்றுநாபியொன்றுதாம்பிரபற்பமொன்றுசித்திரமூலம், தாமென்றவெண்காரமநொச்சிவேறுஞ்சமன்சேர்த்துக்கல்வத்திறபொடித்திடாயே, (கசுக)

அனுபானசூரணம்.

பொடித்ததனைநொச்சியிலைச்சாற்றாலாட்டிப் பொங்கமுடன்கலைதைச்சாறதன்னிலோர்நாள், மடித்தாட்டிக்குன்றியிடை குளிகைகட்டிமைந்தனேயிஞ்சிச்சாற்பின்னுங்கேளு, படித்தாமாய்க்கியாழமப்பாதிப்பிலியின்மூலம் பாக்கானசூரணத்தைப்பகருவோம்நாம், நடித்துடையசீந்திசக்கரையாத்தை நயமானதிம்பனிடபட்டைபாரே. (கசுஉ)

பூரப்பாவாமணக்குபருப்புதானும் பருஞ்சுக்குநொச்சியிலை தேவதாரம், நோப்பாதூளாக்கியதற்குகோரோய்நிறுத்திடுவாய் சுத்திசெய்தகுக்கில்சேர்த்து, ஆரப்பாநெய்விட்டுஆட்டிக்கொண்டுவனுபானசாறுகளிலதிந்துவூட்டு, பேரப்பாவாதத்தைப்பிடுங்கித்தின்னும் புகழானவயிரவன்றன்போக்குந்தானே. (கசுஙு)

இதற்குமருதாங்கிரசம்.

போக்குமிகுமிருதாங்கிஷரசத்தைச்சொல்வோம்புகழானசொர்ணபற்பந்தாம்பிரபற்பம், போக்குமிகுஞ்சூதமிவைசரியாய்ச்சேரு பொன்தாரமிவையிரண்டுகெந்திரண்டு, போக்குமிகுமனோசிலையுங்கழஞ்சாண்டுபொடியாக்கிக்குகைமருந்தைப்புகலக்கேளு,போக்குமிகுவெண்காரம பலகனையுநோய்ப்புகட்டிலதைவெள்ளாட்டுப்பாலிலாட்டே. (கசுச)

ஆட்டியதைக் குகைபிடித்துப் பொடியையிட்டு வடைவாகக்குகைமருந்தா லடைத்துமூடி, நாட்டியிதைச்சட்டிக்குள் ளமைத்துகீயும்நன்றாகமேற்சட்டிக்கவிழ்த்துக்கட்டி, கீட்டியேசிலைசெய்துகெசபுடத்திற்போடு நெருப்பாறியெடுத்ததனைத்தூளாயாட்டி, மூட்டுவாய்பிளகப்பாமூவாறென்று முன்பொடியைநெய்யிலேகுழப்பிடாயே.(

குழப்பியதில்நாலுமன்றியடைபொடிதான்சேர்த்துக்கொடுத்திடமூன்றுதினங்கூறக்கேளு, அளப்பிலேநோயறிந்துநடப்பிலூட்டுவப்பனேசிலேத்துமங்கடொண்ணூற்றாறும், களப்பெ லிபோற்பறந்தோடமதிகசித்தி காட்டுமுன்னேயெட்டுவகைமாந்தநீங்கும், தொழுப்பெரியசஞ்சீவியிதற்கொப்பில்லை சொல்லுகிறேன்தாளேசுரரசத்தைக்கேளே

தாளேசுரரசம்.

கேளப்பா சூதமொன்று தாரமொன்று கெடியானகெந்தியொன்று மனோசிலைதான்ரொட்டி, நீளப்பா தாம்பிரபற்பமதற்குரொட்டி நிசமாகக் கல்வத்தில்நொச்சிச்சாறு, நாளப்பாரண்டுதினமிராப்பகலாயாட்டி நற்குன்றியிடையுருட்டிவைத்துக்கொண்டு, சூளப்பாதிரிபலையுமிளகுநோயச்சூரணித்துத்தேனிலொருவுண்டையூட்டே (கசுஎ)

மகாமோகாரசம்.

ஊட்டவேயுளமாந்தைகழிச்சல்தீரு மூயர்ந்துவருமெலும்புருக்கிச்சுரமாந்தைநிற்கும், மேட்டியுறுமகாமோகாசத்தைச்சொல்வோ மேலானபலகறையின்பொடியுமுன்னே, மாட்டியேசுத்திசெய்தமண்டூகனேராய்மைந்தனேயாவினெய்யில்மயனம்போலே, ஆட்டுவாய்சாமமொன்றுவுலர்த்திப்பின்பு வப்பனேதூளாக்கிவெற்றிலைசசாறுற்றே. (கசுஅ)

ஊற்றியேபாவனைதானேமூவாட்டி யுறவுசெய்துதூளாக்கிக்குன்றிதூக்கி, ஊற்றிடுவாய்காற்கழஞ்சுபசுவினெய்யி லுட்கலந்துசெய்திடவும்சயநோய்தீரும் ஊற்றியவெண்ணெய்தேன்கிபாழமாகும் உத்தமனேயுபாதிகளதிகமானால், ஊற்றுவாய்சாமத்துக்கொருக்கால்நீயு பொன்பத்துப்பத்தாறுமங்கொழிந்துபோமே. (கசுகூ)

ஸ்ரீவாடரசம்.

ஒழிந்திடவேஸ்ரீவாடரசத்தைக்கேளு உயிர்ப்பறிக்கும்வாதகுன்மமொடுங்கியோட, அளிந்தவிந்துமாடவீகம்அப்பிரோகம்மவாட்சாரங்கெந்தியுடன்தாம்பிரபற்பம், பொழிந்திடநீசமனாகத்தூக்கிமைந்தா புகழ்ச்சித்ரமூலச்சாற்கொண்டுவோர்நாள், தெளிந்துவிடாதாட்டிமஞ்சாடிபோலத் திரட்டிவைப்பாயனுபானஞ்செப்பக்கேளே. (கஎ0)

செப்புறேன்வெற்றிலைச்சாற்விட்டனாத்துத் தின்றிடவேவாதகுன்மந்தீருந்தீரும், செப்புறேனனுபானம்வாய்விளங்கம் திறமானஇந்துப்புகாயமேலம், செப்புறேன்சவச்சலுப்புச்சரியாய்த்தூக்கிச் சேரமாதளைச்சாற்றில்சாமமாட்டிச், செப்புறேன்கழஞ்சியிதிற்கூடக்கூட்டித் தின்றிடவேவாதகுன்மந்தெறித்துப்போமே. (கஎக)

சோமரோமரசம்.

போமப்பாபித்தகுன்மந்தனக்குக்கேளு பேர்சோமரோமரசப்போக்குத்தானும், ஆமப்பா சூதமொன்றுநாபியொன்று மரிதாரஞ்சரிசேர்த்து ஆட்டிநீயும், தேமப்பாதேக்கிலைப்பூகாயமூன்றுந் தெரிந்திடித்துரண்டொள்திறமாயாட்டித், தாமப்பாகொடுப்பைச்சாற்தன்னிலோர்நாள் தனித்தாட்டிக்குகையிலிட்டுச்சீலைசெய்யே. (கஎஉ)

சீலைசெய்துகுழிக்குள்ளேமூசைவைத்துத் திறமாகக்குழிமேலே பெருவைவைத்துச், சீலைசெய்தகுகைதனக்குஆறவாறச் செய்திடுவாயிப்படியேயைந்துவாட்டி, சீலைபுறுபுடம்போட்டுத்தூளாயாட்டிச்சேர்த்திடுவாய்கோர்வாளப்பருப்புநேர்தான், சீலைவடிகட்டியதிற்குன்றிதூக்கிச்சேர்ந்தாவிநெய்தனிலேதின்னச்சொல்லே. (௧௭௩)

இராசசேகாரசம்.

தின்னுவிடுமிராசசேகாரசத்தைச் செப்புகிறேன்சிலேற்பனகுன்மம்போக, உன்னுகருலோகபற்பநாபிசூத மூற்றகெந்திவெண்காரந்திரிகடுகுநாலும், தன்னுகிரிபோலுயர்ந்ததாம்பிரபற்பந் தனியேலமிலவங்கபத்திரிதானும், பொன்னூமத்தைவிரைசங்குபற்பந்தானும் புகழுவில்வப்பழச்சதையுஞ்சரியாயக்கூட்டே. (௧௭௪)

கூட்டடாகஸ்தூரிமஞ்சள்தானுங் கூசாமல்மூன்றுநாள்கரிப்பான்சாற்றில, ஆட்டடாகுன்றியிடை குளிகைகட்டியப்பனேதேனிலிடச்சயமைந்தும்போகும், மூட்டடாஈளைபோங்கிராணிபோகு மூடல்வற்றுமெலுமபுருக்குன்மம்போகும், வாட்டடாசெறியாமையையபித்த மகததானகுடல்வாதமண்டவாய்வும், காட்டடாவுதாத்தில்வியாதிகளெல்லாங்கட்டகத்திற்றீப்போலக்கருகிப்போமே. (௧௭௫)

வித்தியாதாரசம்.

கருக்கிவிடும்வித்தியாதாரசத்தை த்தானும் காட்டுகிறேன்குன்மமிலிகையுமவாங்க, அருக்கிவருஞ்சூதமொன்றுகெந்தியொன்று வப்பனேவிமிளையொன்றுதாரமொன்று, பெருக்கியநற்றும்பிரபற்பமஞ்சிலைபுஞ்சமனாய்ப் பேரானதிப்பிலியின்கியாழந்தன்னில், கருக்கியேயார்தினந்தானெட்டிவாங்கிச் சுகமாகக்கியாழத்திற்பாவனை தான்செய்யே

பெரும்பாட்டுக்கு.

செய்ததொருமருந்ததனைப்பணத்திலேபாதி திரட்டிநீதேனிலே செலுத்திப்பின்பு, செய்திடவேயைந்துவகைப்பிலிகையுந்தீருஞ் சீரானவாய்வுகொர்ப்பசூலைக்கெல்லாம் செய்திடுவாயபனவெல்லங்கியாழமிட்டுத் திரிகடுகுசிறுதேக்குச் சமன்தானட்டி, செய்யடாவராகனிடைகியாழத்திற்றூவிச் செலுத்திடவும்பெரும்பாடுதீருங்காணே. (௧௭௭)

யோனிச்சூலை.

காணப்பாபெரும்பாடுதுண்டுதுண்டாய்வீழிற் கியாழத்தில்மேற்பொடியைக்கழறக்கேளு, தோணப்பாவேர்க்கொம்புதேவதாரஞ் சுகமானதிப்பிலியும்புங்கம்பட்டை, பூணப்பாதூளாக்கிவராகன்றூக்கிப்பு

சுட்டவேகுளிகையுடன்புகழ்ந்துநீயும், ஊணைப்பாவலியெடுக்கும்யோனிச்சூலையுண்டானால்வேப்பம்விளையாமணக்குப்பருப்பே. (௧௭௮)

குன்மத்துக்கு.

பருப்புடனேசரிகூட்டிநிம்பச்சாற்றிற் பதமாகக் குளிகையிட்டு யோனியிலேபூசப், பெருப்பமுள்ளவலிதீருமுதாவலியானாற் பேதுபடவுள்ளுருக்குக்கொடுத்துவாரீ, விருப்பமுள்ளகுன்மத்தின் குடோரி சொல்வோம் வெண்காரங்கெந்திரசநாபிதாரம, உருபோதிந்ததிரிகடுகு திரிபலையுஞ்சமனாபுறம்போடிலைக்குநேர்வாளந்தானே. (௧௭௯)

வாளமதைக்கரியாக்கியிஞ்சிச்சாற்றில் மாட்டுவாய்தினமொன்று மயனம்போல, நீளவேயாட்டுநீகுன்றிபோலே கினைவாகவுநட்டியே யிஞ்சிச்சாற்றில், மாளவேகுன்மங்களென்றுசொல்லில் மைந்தனே கொடுத்திடவேவலிகஉரும், சூளவேபாண்டுகுன்மம்பாண்டுநீங்கச்சூட்டுகிறேன்குடோரிதனைச்சூட்டுமேனே. (௧௮0)

சூட்டுகிறேன்வெண்காரநாபிகெந்தி சுகமானகாந்தப்றபந்தாம்பிரபற்பம், நாட்டுபுகழ்சீரகமுந்திரிகடுகுபலையும்நற்கடுகு ரோகணியுஞ் சித்திரமூலம், மாட்டுமெவாச்சாரஞ்சத்தியட்சாரம் மாயாதபஞ்சவும் புவாய்விளங்கங், கூட்டுநேர்சமபாகந்துளாயாட்டிக் குறையாமனேநேர்வாளம்பாதியாமே. (௧௮௧)

பாதியாம்வாளத்துக்கெட்டிவித்து பாங்காகத்தானாக்கி யெல்லாமொன்றாய், நீதியாய்மாதளம்பூப்பழச்சாறவிட்டு நீட்டியேயைந்துதினமாட்டிப்பின்பு, சேதியாமேழுதினங்கரிப்பான்சாற்றில் திறமாகவாட்டியுனதயுலரவைத்து, நீதியாயிஞ்சிவெல்லம்வெந்நீர்நெய்யில் நீட்டவேகுன்மமுதல்தீரும்பாரே. (௧௮௨)

சுரமாலிகை.

பாரப்பாசுரம்போகுமாறல்போகும் பாங்காணசந்நியொடுதோஷம் போகும், ஆரப்பாநோயறிந்துவனுபானஞ்சேர்த்து அளவறிந்துவூட்டுவாயப்பாற்கேளு, நேரப்பாசுரமாலிகையைச்சொல்வோம் நேராணதாம்பிரபற்பஞ்சூதங்கெந்தி, சேரப்பாமனோசிலையுந்தாளகம் வெண்காரந் திரிகடுகுந்திரிபலையுஞ் சீரொன்றமே. (௧௮௩)

ஒன்றானவிதற்குவொட்டிநேர்வாளப்பருப்பு வறச்சேர்த்துக்கல்வத்திற்கரிப்பானீரால், ஒன்றாகவிருசாமமாட்டிவாங்கி யுத்தமனேகுன்

றியிடைகுளிகைசேர்த்து, ஒன்றாகவனுபானமிஞ்சிச்சாற்றி லூட்டே வேயொழியுகிறவியாதிகேளு, ஒன்றாகப்பீலிகையும்வெறுப்புப்பாவை யுதாத்தில்வலிதாகமொழியுந்தானே. (௧௮௪)

சம்பிரதாயச்சூரணம்.

ஒழியுமப்பாகெடுநாளைவியாதியானு லுறச்செய்வாய்விஷதங்கள்ம ண்டலந்தானன்றாய், பொழியகின்றசமபிரதாயசூரணத்தைதக்கேளு. பொங்கிவளராப்பொடியுமிருபத்தைந்தும், தெளியகின்றகெந்திபதின் மூன்றதாகுஞ் செயகாந்தமூன்றுஇரதமிரண்டுங்கூடி, அழியவதைக்கு மரிச்சாற்விட்டுச்சாமமாட்டியேயொருவில்லையாகத்தட்டே. (௧௮௫)

தட்டடாவெருப்போலவகலுமாகத்தான் திரும்பக் கல்வத்திலிட்டு வோட்டால்மூடிக், கட்டடாவியிலிடுசாமமொன்று கறுத்தங்கேபற்ப மாயிருக்கும்பாரு, மட்டடாவாய்விளக்கமிருசீரக்மும் வாகானதிரிகடு குதிரிபலையுநேராய், கொட்டடாதூளாட்டிப்பற்பத்தோடேகூட்டியே சூரணித்துவெடுத்துக்கொள்ளே. (௧௮௬)

சகலகுன்மக்குளிகை.

எடுத்ததொருசூரணத்திற்றீருநோய்கே ளெண்குன்மங்கிராணியு டனக்கினிமாந்தம், படுத்ததொருநோயெல்லாம்பறந்தேயோடும் பாடுகி றேன்சகலகுன்மக்குளிகைதன்னைக், கடுத்ததொருவரப் பொடிதானெ ண்பதாகுங்கனகரசகெந்திசிலைகழஞ்சிரண்டாய், கொடுத்திடுவாய்கும ரிநீர்தன்னாலப்பா குறைவின்றியொருசாமங்குழைய ஆட்டே. (௧௮௭)

குழையவதையாட்டியே யடையாய்த்தட்டிக் கொடிரவியிற்கலத் தோடேசாமமிரண்டு, விளையவேவைத்திருந்துதிரும்பவாங்கு மேன்மை பொடிதானிந்துப்புரண்டுபங்கு இளையாததிரிகடுகுரண்டுபங்கு வென் மகனேகடுக்காய்த்தாளிரண்டுபங்கு, திளையாமலிதுவெல்லாங்கரிப்பான் சாற்றில்தினமொன்றுஆட்டியேவாங்குவாங்கே. (௧௮௮)

வாங்கப்பா ஆட்டடையிலேகைப்படாமல் வழித்ததனைவிராகனெ டைகுளிகைசேர்த்து, பாங்கானவிஞ்சிச்சாற்தன்னில்தேனும்பஞ்சமெ ன்றயோகசயகியாழத்தாலும், நீங்கமாலூட்டவேகுன்மமெட்டுநோராண கிராணிபீலிகையாம்வாய்வும், தாங்காதகுட்டமுதலக்கினிமந்தந் தரியா மலோடிப்போஞ்சத்தியந்தானே. (௧௮௯)

சந்திகுன்மமுதலானநோய்கட்கெல்லாஞ் சாற்றுகிறேனனுபான க்கியாழமப்பா, சித்ரமிடமூலமப்பாபுங்கம்பட்டை சீரானமூக்கனாவே ராயிற்பட்டை, பத்தியுடன்றிரிகடுகுகடுக்காயிந்து பரிவாகக்கியாழமி ட்டெப்பாற்கேளு; மூத்தியுறுஞ்சுகந்தாசந்தன்னைச்சொல்வோ 'முறை யோமிட்டபுலத்தியனே முழுதுங்கேளே. (௧௬௰)

சுகந்தாசம்.

கேளப்பாகெந்திரண்டோபியொன்று கிருலையுடனப்பிரோகசெந் தூரமொன்று, நாளப்பாவிவையெல்லாம்பலமாயத்தூக்கி நயமானகு தமதிற்கழஞ்சியொன்று, சூளப்பாசீரகமுங்கொடுவேலிவேருஞ் சிகசீ ந்திற்சர்க்கரையும்வாய்விளங்கம், நீளப்பாளவாச்சாரம்நொச்சிவேரு மி னைவாகஅரைப்பலந்தான் தூக்குதூக்கே. (௧௬௧)

தூக்கிநொச்சிச்சாறுமாதளையின்பழச்சாறுந் துறையோடேயொ வ்வொருநாள்துஞ்சஆட்டி, ஆக்கமுடன்குன்றியிடைகுளிகைகட்டி ய ப்பனேபஞ்சமூலக்கியாழமாதல், தாக்குடையவிஞ்சிச்சாற்தன்னிலாத ல் தயவாகத்திசைமூலக்கியாழத்தாலே, நீக்கிடவேபெருநோயுமகோ தரமும்வல்லை நீராமைகவுசியிவையெல்லாம்போமே. (௧௬௨)

பஞ்சமூலக்கியாழம்-திசைமூலக்கியாழம்

போமென்றபஞ்சமூலக்கியாழக்கேளு புகழானதிப்பிலியின்மூல ங்கூட, ஆமென்றசெவ்வியமும்சித்திரமூல மடைவானவேர்க்கொம்பு மிவையைந்தாகும்; நாமென்றதிசைமூலக்கியாழஞ் சொல்வோம் நய மானபெருமுன்னைபெருவாகைவில்வம், வேமென்றபாதிரியுங்கண்டங் காலி மேலானநெரிஞ்சிவேர்சிறுவழுதலையின்வேரே. (௧௬௩)

ஸ்திரீவிக்கிரமாசம்.

வேரானசிற்றுமல்லிபோமல்லி வேர்க்கொம்புந்திசைமூலக்கியா ழமாச்சு, போரானகிரிச்சனங்களாறும்போகப் பேசுகிறேன்ஸ்திரீவிக் கிரமாசத்தைமைந்தா, நோாகச்சூதமொடுதாம்பிரங்கெந்தி நீயாட்டுதி னமொன்றுநொச்சிச்சாற்றில், சீராகவாங்கியொருவில்லையாக்கிச் சிறு சட்டிக்குள்ளிட்டுமண்தான்செய்யே. (௧௬௪)

மண்செய்துநாளிதனிற்படிதாமெட்டு மணலிட்டுச்சட்டிதனைய தன்மேல்வைத்துப், பண்ணிட்டசட்டியின்மேல்மணலுமிட்டுப் பாங்

காகச்சாமமொன்றுவெரித்துவாங்கி, உண்ணுதற்குமாதளம்வேர்த்தூளாலாட்டி யுத்தமனேவராகனிடை தூக்கிகீயும், வண்ணமுள்ளமாதளம்பூச்சாறுதன்னில் மாட்டியேகுன்றியிடைபற்பம்போடே. (௧௯௫)

பற்பத்தில்தீருகிறவியாதிகேளு படரானகல்லடைப்புநீரடைப்பு வெப்பமூறுமசதையடைப்புசோனாக்கட்டு வெண்கடுப்புசீயடைத்தல்வீரணக்கட்டு, அற்பமூறும்நரம்படைப்புமூத்திரங்குட்ட மடைவையெல்லாந்தெறித்துப்புண்ணாறுமைந்தா, சொற்பமல்லபண்டிதன்தான் பனிரண்டிலெட்சஞ் சுருக்கியதைச்சூத்திரமாய்ச்சொன்னேன்பாரே. ()

சொல்லுகிறேன்சுரதோஷஞ்சன்னிவாதம் துணுக்குடனே யுட்குத்துதனுவுக்கெல்லாம், வெல்லுமேநீட்டையிலேபாணம்போல விஷ்ணுபராக்கிரமரசந்தானுமப்பா, நல்லரசநாபிகெந்திவெண்காரமிந்துநலமானஎவாச்சாரம்சத்தியட்சாரம்,கொல்லுமேநோயனைத்துஞ்சங்கட்சாரங் கூடவேசமபாகங்கல்வத்தாட்டே. (௧௯௭)

ஆட்டுவதுமத்தஞ்சாற்சாமமொன்று வப்பனேகுகையிலிட்டுவாயைமூடிக், கூட்டுவதுக்குக்குடமாம்புடத்தைப்போடு குறைதீரப்பாசுணைக்குப்பித்தைச்சொல்வோம், மாட்டுவதுமீன்பித்துப் பன்றிப்பித்துமைந்தனேபன்றியென்றால்காட்டுப்பன்றி, நீட்டியதைமாவிடையாய்க்குளிகைசெய்து நீயூட்டுகுளிர்ந்தசலமிஞ்சிச்சாறே. (௧௯௮)

சாறுகுந்தண்ணீராமிவற்றுக்கெல்லாந் தாக்கவேவாதசாஞ்சன்னிவாதம், வீறுகுமவாதஞ்சீதாங்கதோஷ மென்றுதின்னும்பிரலாபத்துணுக்குத்தானும், மாறுதகாண்டீபங்கெம்பீரபூத மதியழிக்கும்பிரலாபஞ்சன்னிபோகு, மாறுகுங்கிராணிமுதல்கிரிழிவுக்கெல்லா மானந்தவைரவத்தையறையக்கேளே. (௧௯௯)

ஆனந்தவைரவம்.

அறைகிறேன்வெண்காரநாபிசூத மப்பனேசாதிலிங்கதிப்பிலிரண்டிளகு, கிறைவாகத்தூக்கிகீயிஞ்சிச்சாறு நேர்சமன்சம்பழச்சாறுங்கலந்துகொண்டு, குறையாமலீரிரண்டுசாமமாட்டு குன்றிபோலுருட்டடா குளிகைதானும், கறையானகிராணிக்குமுத்தக்காசு கனத்தவதிவிடையம்பொன்முசுட்டைவேரே. (௨00)

முசுட்டைவேர்வேர்க்கொம்புஞ்சரியாய்வாங்கி முறுகவதைக்கியாமமிட்டுக்குளிகையூட்டு, முசுட்டையுறுமேதிமோர்புட்டிலூட்டமோதிவருநீர்மேகமோடுந்தூர, முசுட்டைவேர்பழச்சாற்றில்சுவாசகாச முதிர்ந்துநின்றவேர்க்கொம்புகிராம்புதானு, முசுட்டைபெறுந்திப்பிலியுஞ்சரியர்யாட்டி முதிர்தயிரில்வாரகனெடைகொடுத்திடாயே. (௨0௧)

நீரிழிவுக்கு மேகாதிக்குளிகை.

கொடுத்திடவேயதிசாரந்திருமப்பா கூறானவசீரணத்துக் குறவு
கேளு, அடுத்துநீவழுதலையினீரிலூட்டு வக்கினிமாந்தத்துக்கறையக்
கேளு, கடுத்துடையதிரி கடுகுபொடியினூட்டு கனவாய்வுபோ
கவென்றால்கியாழஞ்சொல்வோம், படுத்திடுமேயெவ்வகையுந்நிவர்த்தி
யாகப் பஞ்சமூலக்கியாழமடாபத்திகேளே. (௨0௨)

பத்தியுறுமேகாதிக்குளிகைசொல்லப் படானநீரிழிவுவனைத்து
மோடும், புத்தியுறுஞ்சூதமப்பாகழஞ்சபத்து புகழானவப்பிரோகச்சிவ
ப்பிரொட்டி, சித்தியுறுங்கெந்தியப்பாவைப்பதற்குத் திருமாலதன்தாரம
துவைம்பதாகும், வெற்றியுயர்சலாசத்துக்கழஞ்சியைந்து மேலானகா
ரீயச்செந்தூரங்கேளே. (௨0௩)

செந்தூரங்கழஞ்சியுமோர்முப்பதாகுஞ் சேர்த்திடவேமேல்மருந்
தைச்செப்பக்கேளு, பந்தூரப்பருத்திவிதைதேற்றான்வித்து பாங்கா
னவெண்குன்றிவித்துதானும், கந்தூரம்புளியம்விதைதோடுநல்லகற்க
ட்கச்சிங்கியிவைசமனாய்க்கீயும், மந்தாரக்கழஞ்சியைந்துநிறுத்துவாங்கி
யப்பனேமரமஞ்சள்தூக்குதூக்கே. (௨0௪)

மஞ்சளெனுங்கஸ்தூரிமஞ்சள்தானும் மன்னர்பணிசிலப்பனேவே
ர்சித்திரமூலம், மிஞ்சாமற்பப்பத்துக்கழஞ்சுதூக்குவெம்பு வெள்வேல
க்கருங்காலிகருவேலம்பிசினும், துஞ்சவேகழஞ்சுபத்து தென்னம்பா
ளைத்தூளங்கேழும்மூன்றுகழஞ்சுதூக்கு, தஞ்சமூறுந்திரிகடுகுவெண்
பதாகுந் தனித்திந்தவினங்களெல்லாம்நிறுத்துக்கொள்ளே. (௨0௫)

கொள்ளடாயாவாரையுமருகிலந்தை தோடயிலைச்சாறதனைப்பிழி
ந்துநீயும், தள்ளடாமூன்றுதினம்வெவ்வேறாகத் தளராமல்நீராட்டிவா
ங்கிமைந்தா, எள்ளடாதேற்றான்விதைப்பிரமாணத்தி லென்மகனேதி
ரட்டியேயெடுத்துவைத்து, உள்ளடாகுளிகையொன்றுதேனிலீய மே
கமென்றதிருபதையும்வெல்லுங்காணே. (௨0௬)

நீரிழிவுக்குக்கியாழம்.

வெல்லுதற்குக்கியாழவகைசொல்லக்கேளு மேன்பொடிக்கியா
ழமிடுதுடரிசுண்டை, நல்லசுண்டிநீர்ப்பூலாகூனைகடலிருஞ்சி நலமான
இப்பவலாவனாபொன்முசுட்டை, வல்லவேவேணுவிலைமுத்தங்காய்நி
ரிடலையும்வாவீருபுரித்தேற்றம்வகைநேரோதான், புல்லவேஅளாக்கிப்பா
ண்டத்திட்டுப் புதுச்சட்டிக்குள்ளொருபிடிதான்போடே. (௨0௭)

போட்டடங்கேசலம்விட்டெரவியிற்சீலை புகழாகவேடுகட்டிமூன்று சாமம், நீட்டடங்கேதிரும்பவதைக்குறுக்கிக்காய்ச்சி நேராகக்காறபடிக் குள்கழஞ்சுதேன்தான், ஊட்டடங்கேகாலத்திலிரவிற்கொள்ளு உத்தம னேபொன்முசுட்டைவேரினொடு, நாட்டடங்கேதிரிகடுகுமுத்தக்காசு ந லமானமூங்கிலிலைதிரிபலைநேராமே, (௨௦௮)

நேராகக்கழஞ்சிரண்டுதூக்கிக்கொண்டு நீர்படிதான்ரண்டுவிட்டு வுழக்காய்க்காய்ச்சு, சீராகக்கொண்டிடவேகிரிகைகேளு சீதமேகமது மேகங்காளமேகம், வாராததசமேகம்பத்திமேகம் வறளவேகனலமே கம்வாதமேகம், போராகவுருக்குமாங்கிஷமேகம்புகழாகாண்டுபத்துமே கம்போமே. (௨௦௯)

சயம் சுவாசகாசத்துக்குக் கண்டங்காரிநெய்.

போகாதசயகாசம்போகவமந்தா புகழ்கண்டங்காரிநெய்யைப்புக லக்கேளு, வாகாகச்சமூலமெல்லமிடித்துச்சாறு வாங்கடாபடியொன் றுநெய்தானொன்று, பாகமுடன்கலந்திதன்மேற்பாகங்கேளு பருநெல் லிசிறுதேக்குசிற்றரத்தை, சேகரமாம்வெட்பாலைகிழ்க்காய்நெல்லி சிற ப்பானசிறுகாஞ்சோறிவேறே. (௨௧௦)

சுவாசகாசத்திற்குத்திப்பிலிநெய்.

